

# ஆண்டு அறிக்கை
# 2016 - 2017

Chennai Metropolitan Water Supply and Sewerage Board

# ஆண்டு அறிக்கை
# 2016 – 2017

## பொருளடக்கம்


| வ.எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | வாரிய இயக்குநர்கள் | 46 |
| 2. | தணிக்கையாளர்களின் அறிக்கை | 47 |
| 3. | இருப்பு நிலைக்குறிப்பு | 55 |
| | வரவு–செலவு கணக்கு | 56 |
| | அட்டவணை | 57 |
| 4. | குறிப்பிடத்தக்க கணக்குமுறைக் கோட்பாடுகள் | 65 |
| 5. | கணக்குகள் மீதான குறிப்புகள் | 69 |
| 6. | தமிழக அரசின் ஆய்வறிக்கை | 78 |
| 7. | நிதிநிலைச் சுருக்கம் – ஐந்தாண்டு ஒரு கண்ணோட்டம் | 87 |

Chennai Metropolitan Water Supply and Sewerage Board

# தன்னாண்மை தணிக்கையாளர் அறிக்கை

எம்.சி. ரெங்கநாதன் மற்றும் குழுமம்
பட்டயக் கணக்காளர்கள்
பதிவு எண் 003061 S

எண். 147/1, 2வது மாடி,
கணேஷ் சிவசாமி ஸ்கொயர்,
ஹபிபுல்லா ரோடு,
தி. நகர், சென்னை – 600 017.
தொலைபேசி எண் : 044 – 28156967
மின் அஞ்சல் : mcs@camcr.in

## தணிக்கையாளர் அறிக்கை

## சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய இயக்குநர்களுக்கு

### நிதி நிலை மீதான அறிக்கை

1. நாங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் 2017 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாளின் நிலவரப்படி இருப்பு நிலைக் குறிப்பினையும், அந்நாளில் முடிவுற்ற ஆண்டின் வரவு செலவுக் கணக்கையும், அதில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைகளையும், சுருக்கமான குறிப்பிடத்தக்க கணக்கு முறைக் கோட்பாடுகளையும் மற்றும் கணக்குகள் மீதான குறிப்புகளையும் கணக்காய்வு செய்து முடித்துள்ளோம்.

### நிதி நிலை அறிக்கைக்கு நிர்வாகத்தின் பொறுப்பு

2. இந்த நிதிநிலை அறிக்கை தயாரிப்பிற்கு சென்னைக் குடிநீர் வாரிய நிர்வாகமே பொறுப்பாகும், இவ்வறிக்கையில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய 1978 ஆம் வருட சட்டப்படியும், இந்தியாவில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்கியல் கோட்பாடுகள், தரநிலைகள் பொருத்தமான கணக்கு வைப்பு தரப்படியும், உண்மையான மற்றும் நியாயமான நோக்குடன் சென்னை குடிநீர் வாரியத்தின் நிதி நிலையையும், நிதி செயலாக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நிதிநிலை அறிக்கையை உண்மையான மற்றும் நியாயமான நோக்குடன் தயாரித்து முன்னிலைப்படுத்துவதற்கு தொடர்பான வடிவமைத்தல், செயற்படுத்துதல் மற்றும் உள்கட்டுப்பாடு பராமரித்தல் நிர்வாகத்தின் பொறுப்பில் அடங்கும். தவறாகவோ அல்லது மோசடி காரணமாகவோ இந்த நிதிநிலை அறிக்கையில் தவறான தகவல் ஏதும் சேர்க்கப்படவில்லை. நிதிநிலை அறிக்கையில் மோசடி மற்றும் பிழை போன்ற இடர் மதிப்பீடு செய்வதற்கு அறிக்கை தயாரிக்கும் போது சூழ்நிலைக்கேற்ப நடைமுறைகள் பின்பற்றி உரியவாறு வடிவமைக்கப்பட்ட தக்க உட்கட்டமைப்பை நிர்வாகத்தின் அனைத்து நடவடிக்கைகளும் பயனுள்ளதாக இருக்கும் வகையில் நடைமுறைப்படுத்தி உள்ளது.

### தணிக்கையாளரின் பொறுப்பு

3. இந்த நிதிநிலை அறிக்கையின் மீது எங்களது தணிக்கையை அடிப்படையாக வைத்து கருத்தைத் தெரிவிப்பது எங்களது பொறுப்பாகும். நாங்கள், இந்திய பட்டயக் கணக்காளர்கள்

நிலையத்தின் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள தணிக்கையின் தரத்தில் தணிக்கை செய்துள்ளோம். இந்த நிதிநிலை அறிக்கையில் தவறான தகவல்கள் எதுவும் சேர்க்கப்படவில்லை என்று நியாயமாக உறுதியளிக்கும் வகையில் நாங்கள் ஒழுக்கவியல் தேவைக்கேற்ப தணிக்கையைத் திட்டமிட்டு, நடத்தி முடிக்க இந்த தணிக்கைத் தரங்கள் வலியுறுத்துகின்றன.

4. நிதிநிலை அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள தொகைகளுக்கும், வெளிப்படுத்தப்பட்ட விவரங்களுக்கும் தகுந்த ஆதாரங்கள் உள்ளது என்பதை சோதனை அடிப்படையில் பரிசீலனை செய்வதும் தணிக்கையில் அடங்கும். தணிக்கையாளர்களின் தீர்ப்பானது, நடைமுறை தெரிவு சார்ந்து, நிதி நிலை அறிக்கையில் எந்த வித முறைகேடுகளோ, இடையூறுகளோ, ஏமாற்றமோ, பிழையோ இன்றி மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை சார்ந்தது. மேற்படி இடர் அளவினால், உள்தணிக்கை கட்டுப்பாடு வாரியத்தின் முன்னேற்பாட்டில் நிதிநிலை அறிக்கை, தணிக்கை நடைமுறை சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆனால் வாரியத்தின் உள் கட்டுப்பாடு குறித்த பயன்பாட்டின் கருத்தினை வெளிப்படுத்த நோக்கமில்லை. கணக்கு கோட்பாடுகளையும், நிர்வாகத்தால் செய்யப்பட்ட முக்கிய மதிப்பீடுகளையும் ஆய்வுடன் ஒட்டு மொத்த நிதிநிலை அறிக்கையின் வெளிப்பாட்டை சீர்தூக்கிப் பார்த்தலும் இத்தணிக்கையில் அடங்கும்.

5. கணக்கியல் விதிகள் மற்றும் தணிக்கை தரத்திற்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டும் தணிக்கை அறிக்கைக்கு சேர்ப்பதற்கான விஷயங்களையும் கருத்தில் கொண்டுள்ளோம்.

6. நாங்கள் மேற்கொண்ட தகுதியான தணிக்கை கருத்துகளுக்கு அடிப்படையான, ஏற்ற வகையில் தேவையான அனைத்து தணிக்கை ஆதாரங்களையும் பெற்றுள்ளதாக நம்புகிறோம்.

எ. மானியம்

1. அட்டவணை–கீழ்–இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு–குறிப்பு எண் II – 8 – அரசிடமிருந்து மானியம் – பிப்ரவரி 2017 மற்றும் மார்ச் 2017ம் மாதங்களில் பெற்ற ரூ. 8.97 கோடிக்கான மானியத்தை கணக்கில் கொண்டு வராமலிருப்பது, இதே போல் ஒரு திட்டப்பணிக்காக வாங்கப்பட்ட மானியம் வேறொரு திட்டப்பணிக்காக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது ஆகியவை கணக்கியல் நியமம் – 4 வினை புறம்பான செயலாகும் மற்றும் இருப்பு நிலைகுறிப்பு தேதிக்கு பின்பு நடைபெற்ற இச்சம்பவம் இந்தியக் கணக்காளர் நிலையத்தால் அறிவிக்கப்பட்ட கணக்கியல் நியமம் – 12க்கு புறம்பானது. அதன் விளைவாக அரசு மானியம் பொறுப்புகள் தலைப்பின் கீழ் பொறுப்பினை பார்த்த நிதி மற்றும் நடப்பு சொத்துக்கள் அட்டவணை இடப்பட்ட வங்கி நடப்பு கணக்கில் குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2. அட்டவணை கீழ் – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் II - 1,2,3,4 – அரசு மானியம், பெருநகர வளர்ச்சி திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்திற்கான கூடுதல் மைய உதவி நெம்மேலி கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் மற்றும் இதர திட்டங்களுக்கு இந்த நடப்பு ஆண்டு பெறப்பட்ட தொகை 439.21 கோடி (சென்ற ஆண்டு – 374.69), பங்குகளுக்குப் பதிலாக அரசு மானியமாக கருதப்படுவது குறித்த இந்திய பட்டயக்

கணக்காளர்கள் நிறுவனம் பிறப்பித்த கணக்கு வைப்பு முறை (திருத்திய) 12ன் படி, பொறுப்பில் மானியம் அதிகப்படியாகவும் பங்குகள் குறைவாகவும் காட்டப்பட்டுள்ளது.

3. இரண்டாம் சென்னை திட்டத்திற்கும், சென்னை மாநகர நதி பாதுகாப்பு திட்டத்திற்கும் மானியங்கள் பெறப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்குண்டானபணிகள் முடிவடைந்தன. பணிக்குண்டான சொத்துக்களை "நடப்புபணியில் சேர்த்து, பெறப்பட்ட மானியத்தை கடன்பாடாக பாவிக்கப்பட்டுள்ளது. கணக்கியல் கொள்கை மானியங்களை கருதும் முறைபற்றி தெளிவாக இல்லை. கணக்கியல் நியமப்படி அரசாங்க மானியங்கள் தனியாக காண்பிக்கப்படுகிறது. அரசாங்க மானியம் பொருத்தவரை இவை திருப்பி செலுத்தப்படுவதில்லை.

## பி) நடப்பு கடன்கள் மற்றும் ஒதுக்கீடுகள்

1. அட்டவணை 4பி – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் V – 2– மற்றபொறுப்புகள்– மற்றவை தலைப்பில் 14 பேரேட்டு கணக்கில் காட்டப்பட்டுள்ள மொத்த தொகையான ரூ. 225.03 கோடி (சென்ற ஆண்டு – 169.92 கோடி – 16 பேரேட்டு) பற்று இருப்புக் கணக்கில் காட்டப்பட்டுள்ளது.

2. அட்டவணை 4பி – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் V – 2 – மற்றைய பொறுப்புகள் – மற்றவை – தலைப்பில் ரூ. 20,09,651/– (பேரேட்டு எண் – 5390) சேமிக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் பணிக் கொடைக்கு பரிமாற்றும் செய்யப்பட்டத் தொகை மற்றும் ரூ 13,18,201/– (பேரேட்டு எண் – 5410) பொது பணித் துறையிலிருந்து பரிமாற்றும் செய்யப்பட்டத் தொகை நீண்ட நாட்களாக கணக்குத் தீர்க்காமலிருப்பதன் விளைவாக கடன்பாட்டுக் கணக்கில் அதிகப்படியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

## சி) நிலையான சொத்துக்கள்

1. நிலையான சொத்துக்கள் – முன்னேற்றத் திட்டங்களுக்கான இருப்புத் தொகையான ரூ. 7.12 கோடி ஒத்திசைவு செய்யாத காரணத்தால், கணக்கில் ஏற்படும் தாக்கத்தை தீர்மானிக்க இயலவில்லை. பகுதி அலுவலகத்திலிருந்து தலைமை அலுவலகத்திற்கு குறிப்பீடு பதிவு மூலமாக சொத்துகளாக மாற்றும் செய்வதை நிறுவனம் கருத்தில் கொள்ள வேண்டும்.

2. அட்டவணை 4பி – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்புகள் – குறிப்பு எண் VI–1 நிலையான சொத்துக்கள்–572 முன்னேற்றத் திட்டங்களுக்கான கணக்கில் எவ்வித நடவடிக்கையோ, முன்னேற்றமோ இல்லாமல் 2015–16 மற்றும் 2016–17 ஆண்டுகளில் மொத்த ரூபாய் 728.40 கோடி உள்ளது மற்றும் கணக்கு முறைக்கோட்பாடுகளின் தற்காலிக விகிதமுறையில் தேய்மானத்திற்கு என்று எவ்வித ஒதுக்கீடும் செய்யாமலிருப்பதால், கணக்கில் ஏற்படும் தாக்கத்தை தீர்மானிக்க இயலவில்லை.

3. அட்டவணை 4பி – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்புகள் – குறிப்பு எண் VI–5– நிலையான சொத்துக்கள் – முன்பிருந்த உள்ளாட்சி அமைப்புகள் சில நிலையான சொத்துக்கள் மீது அவர்களுக்கு உரிமை இல்லாத நிலையில் பயன் படுத்தியதால் சென்னைக் குடிநீர் வாரியம்

அதற்குண்டான இருப்பீட்டுத் தொகையை உண்மையான உரிமையாளர் செலுத்திய போதிலும் சென்னைக் குடிநீர் வாரியம் பெயரில் இன்றும் அச்சொத்துரிமை மாறாமலிருப்பதால் கணக்கில் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை. வட்டாட்சியரிடமிருந்து (நிலம் மற்றும் உடைமை) உறுதிப்படுத்த கோரியும், அதற்கான விளக்கங்கள் அளிக்கப்படவில்லை.

4. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VI–6– நிலையான சொத்துக்கள் – வருட்சி நிவாரணப் பணிகள் தலைப்பில் உள்ள நிலையான சொத்துக்களின் மதிப்பு ரூ. 110.78 கோடியில் (சென்ற ஆண்டு – 110.52 கோடி) வழக்கொழிந்த சொத்தின் மதிப்பை தள்ளுபடி செய்யாத காரணத்தால் நிலையான சொத்துக்களின் மதிப்பு அதிகமாகவும் செலவினக் கணக்கில் வருவாயைக்காட்டிலும் குறைவாகவும் 31.3.2017 அன்று உள்ளபடி காட்டப்பட்டுள்ளதால் அதற்கிடான தொகை பற்றாக்குறையில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

ஒ) பொருள் விவரப்பட்டியல்

1. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII – 1அ– 31.3.2017 அன்றுள்ளபடி பழமையான பொருட்கள் விவரப்பட்டியலை பகுத்தாய்வது இல்லையால், வழக்கொழிந்த/பயனற்ற இருப்புக்களை கண்டு பிடிக்கும் செயல்முறை இல்லையாலும், கணக்கில் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

2. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII – 1இ – பண்டகசாலை தனிக் கணக்கிலுள்ள நிலுவை இருப்புத் தொகை ரூ. 5,00,487/– (பேரேட்டு எண் – 8250) தள்ளுபடி செய்யாத காரணத்தால், நடப்புச் சொத்துக்களின் கீழ் பொருட்கள் விவரப்பட்டியலில் அதிகப்படியாகவும், 31.3.2017அன்று முடிவுற்ற தேதியில் வரவு செலவுக் கணக்கில், வரவை விட செலவு அதிகம் என்பதால் அன்றைய தேதியில் மொத்தப் பற்றாக்குறையாக காட்டப்பட்டுள்ளது.

3. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII –1ஆ – 31.3.2017 தேதியில் (பேரேட்டு எண் – 8240), பண்டகசாலை குறைவு என்ற கணக்கில் ரூ. 1.94 கோடி (பற்று இருப்பு) மற்றும் (பேரேட்டு எண் – 8230) பண்டகசாலை மிகுதி என்ற கணக்கில் ரூ. 1.88 கோடி (வரவு இருப்பு) நிலுவை இருப்பை ஒத்திசைவு செய்யாத காரணத்தால் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

4. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII –1 ஈ – 31.3.2017ம் தேதியில் பொருட்கள் பட்டியலில் கொடுத்துள்ள சான்றிதழின்படி உள்ள பொருட்கள் இருப்புக்கும் அது சம்பந்தப்பட்ட 5 பண்டகசாலைகள், அதாவது ஈக்காட்டுதாங்கல் மத்திய கிடங்கு, பகுதி அலுவலகம் 1, 7, 10 மற்றும் 13 இருப்பு பேரேட்டுக் கணக்கில் உள்ள நிலுவை இருப்புக்கும் இடையில் காணப்படும் மாறுபாட்டை அதற்கென்ற கணக்கில் ஒத்திசைவு செய்யாத காரணத்தால் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை. மேலும் பகுதி அலுவலகம் 3 மற்றும் 4லிருந்து பண்டகசாலை உறுதியளிப்பு சான்றிதழ் வழங்கப்படவில்லை.

5. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII –1உ – 31.3.2017ம் தேதியில் பேரேட்டு கணக்கு எண்கள் 8252, 8253, 8264 ஆகியவற்றில் பண்டக சாலை மொத்த நிலுவை இருப்புத் தொகையான ரூ. 3.73 இலட்சம் (வரவு இருப்பு) (சென்ற ஆண்டு – 11.70 இலட்சம்) மற்றும் ரூ. 19.43 இலட்சம் (பற்று இருப்பு) ஆகிய நிலுவை இருப்புகளை திரும்பப் பெறாதது / தள்ளுபடி செய்யாதது என்பதால் அதற்கென்ற கணக்கில் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

6. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலின் மேலான குறிப்புகள் – குறிப்பு எண் VII – 1 உ – தொகுதி பண்டகச்சாலைகள் கணக்கில் வராத கணக்கியல் குறிப்புகள், அநாகப்பட்டது தலைமை அலுவலகம்/2 தொகுதிகளுக்கான தொகுதி பரிவர்த்தனை கணக்கு/குறிப்பாக தொகுதி எண் 10ன் ரூ. 2.86 லட்சங்களின் கணக்கு குறைபாடு மற்றும் தொகுதி எண் 13ன் ரூ. 8.64 லட்சங்களின் கூடுதல் கணக்கு (12 தொகுதிகளின் கூடன் நிலுவை – ரூ. 17.73 லட்சங்கள்) தேதி 31 மார்ச்2017ன் படி நடப்பு சொத்துகளின் மேல் இதன் தாக்கம் இன்னும் கணக்கிடப்படவில்லை.

7. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலின் மேலான குறிப்புகள் – குறிப்பு எண் VII –1உ – (பேரேட்டு எண் – 8282) – மாற்றவியலா / உள்ளார்ந்த பொருளுடைய மதிப்பு ரூ. 2.78 கோடி, நடப்பாண்டின் வரவு இருப்பாக காட்டுகிறது. கணக்கில் இதன் தாக்கம் இன்னும் கணக்கிடப்படவில்லை.

**இ) தலைமை அலுவலகம்/பகுதி பரிவர்த்தனை**

1. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII–3 31.3.2017ம் தேதிப்படி – தலைமை அலுவலகம் / பகுதி அலுவலக நடவடிக்கை கணக்கில் காணப்படும் நிகர வரவு இருப்புத் தொகையான ரூ. 266.82 கோடியை (சென்ற ஆண்டு – 100.98 கோடி) ஒத்திசைவு செய்யப் படாத காரணத்தால், ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

**ஈ) வருவுக் கட்டுப்பாடு கணக்கு**

1. அட்டவணை–க்யூ– நிதி இருப்பு நிலை தகவல் குறிப்பு – குறிப்பு எண் VII – 4 – 31.3.2017 அன்றுள்ள தேதிப்படி – வருக்கட்டுப்பாட்டு கணக்கின் இருப்பு ரூ. 2.83 கோடி (சென்ற ஆண்டு – 4.07 கோடி) பயனீடு செய்யபடாததால், இந்த கணக்கின் மீதான தாக்கத்தை அறிய இயலவில்லை.

**உ) வங்கி கணக்கு**

1. 31.3.2017 அன்றைய தேதிப்படி கணக்கு குறியீட்டு எண்கள் 9024, 9026, 9127, 9135, 9139, 9143, 9149, 9204 மற்றும் 9241 ல் உள்ள மொத்த வரவுத் தொகையான ரூ.151.54 கோடி ஒத்திசைவு செய்யப்படாத காரணத்தால், ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை. மேலும், மேலேயுள்ள பேரேட்டு எண்களுக்கு ஒத்திசைவு செய்யப் படாத காரணத்தால் வாரியத்தின் வரவு, செலவு மற்றும் சொத்துக்கள், பொறுப்புகள் ஆகியவற்றின் உள்விளைவுகளை கண்டறிய இயலவில்லை.

2. கனரா வங்கி கணக்கில் வசூலிக்கப்பட்ட ரூ. 452.53 கோடி (பேரேட்டு எண் – 9131) (சென்ற ஆண்டு – 38.12 கோடி) பற்று இருப்பாக உள்ளது. இதற்கான ஒத்திசைவு செய்யப் படாத காரணத்தால், ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

### எச்) காலவரை வைப்புத் தொகை

1. அட்டவணை–க்யூ– இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII – 5 – வங்கிகளில் குறைந்த கால வைப்புத்தொகை ரூ. 405.46 கோடிகள் (சென்ற ஆண்டு – 306.63 கோடி) மார்ச் 2017ன் படி ஒத்திசைவு செய்யப்படாததால் கணக்குகளின் மீது அவற்றின் தாக்கத்தை உறுதிப்படுத்த இயலவில்லை.

2. அட்டவணை–க்யூ– இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII – 7–i) - 31.3.2017 அன்றுள்ள தேதிப்படி, வங்கிகளில் வைத்துள்ள முதலீடான காலமுறை வைப்புத் தொகை (பேரேட்டு எண் – 9170 மற்றும் 9171) உள்ள நிலுவை இருப்புத் தொகைக்கும் பணப்பிரிவிலுள்ள பதிவேடுகளிலுள்ள நிலுவை இருப்புத் தொகைக்கும் ஒத்திசைவு செய்யப்படாத காரணத்தால் அதன் தாக்கத்தை அறிய முடியவில்லை.

3. தலைமை அலுவலகத்தின் வங்கி வட்டி, 26 கணக்கியல் நியமத்தோடு ஒத்திசைவு செய்யப்படவில்லை.

### ஐ. கடன்களும் மற்றும் முன் பணங்களும்

1. கணக்கு குறியீட்டு எண்கள் 8600, 8720 மற்றும் 8820 உள்ள தொகையான ரூ. 6,08,255/– (சென்ற ஆண்டு – 6,84,034/–) தொழிலாளர்களுக்கு முன்பணம் இருப்பு தொகையாக காண்பிக்கப்பட்டுள்ளது.

### ஜே. சேர்ந்துள்ள வட்டி

1. அட்டவணை–க்யூ– இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VII – 7 II) & 7 III) – ஒத்திசைவு செய்யப்படாத மீதமுள்ள தொகைக்கான வட்டி அதிகரிப்பு கணக்கு பேரேட்டு எண் 8520, 8523 வரவு இருப்பு ரூ. 14.93 கோடியாக (சென்ற ஆண்டு – பேரேட்டு எண் 8520, 8523, 8524 – ரூ. 38.25 கோடி) காட்டப் படுவதால், அதன் தாக்கத்தை அறிய முடியவில்லை. நிலுவையில் உள்ள சமன் செய்யப்படாத இருப்பு நிலை பற்றியது. கணக்கில் இதன் தாக்கம் வரையறுக்கவியலாதது.

### கே. பணியாளர்களுக்கான ஓய்வு காலப் பலன்கள்

1. அட்டவணை–க்யூ–வரவு செலவு கணக்கிற்கான குறிப்பு–குறிப்பு எண் V 1 & 2ஆ பணியாளர்கள் ஓய்வு காலப் பலன்களான ஓய்வூதியம், பணிக்கொடை, விடுப்பிற்கான தொகை ஆகியவற்றிற்கான சட்டரீதியான பொறுப்புகள் 31.03.2017 முடிய கணக்கிடப்பட்டு, ஒதுக்கப்படாததால் இதுகுறித்து ஏற்படும் விளைவுகளை உறுதிப்படுத்த இயலவில்லை. கணக்கியல் நியமம் 15ன் படி "பணியாளர்களுக்கான நலன்களுக்கு" இது பொருந்தாது.

2. அட்டவணை–கியூ–வரவு செலவு கணக்கிற்கான குறிப்பு–குறிப்பு எண் V – முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து பெறப்பட்ட பணியாளர்களின் ஓய்வு காலப் பயன்களான ஓய்வூதியம், பணிக்கொடை, விடுப்பிற்கான தொகை ஆகியவற்றிற்கான சட்டரீதியான பொறுப்புகள் 31.03.2017 முடிய கணக்கிடப்பட்டு ஒதுக்கப்படாததால் இதுகுறித்து ஏற்படும் விளைவுகளை உறுதிப்படுத்த இயலவில்லை. பட்டயக் கணக்குகள் அலுவலகம் பிறப்பித்த கணக்கு வைப்பு முறை வழங்கிய கணக்கியல் நியமம் 15ன் படி "பணியாளர்களுக்கான நலன்களுக்கு" இது பொருந்தாது.

**எஃ) <u>இதர செய்திக் கூறுகள்</u>**

1) <u>உள் தணிக்கை :</u> வாரியத்தின் இயக்கத்திற்கு ஏற்ப, உள் தணிக்கை குழு மற்றும் கட்டுப்பாட்டு இணக்கம் இல்லாமை, பொருள் தணிக்கை மற்றும் நிலையான சொத்துக்களின் சரிபார்ப்பு தணிக்கையின் கீழ் இந்தாண்டு மேற்கொள்ளப்படவில்லை.

2) கணக்கு மிச்ச இருப்பு உறுதிப்படுத்துதல் : மூன்றாம் தரப்பு கணக்கு மிச்ச இருப்பு குறித்து, இக்கணக்கு உறுதிப்படுத்தல் மற்றும் ஈடுகட்டுதலுக்கு உட்பட்டது. இதனால் கணக்கில் ஏற்படும் தாக்கம் கணக்கிடப்படவில்லை. தமிழ்நாடு மின்சார வாரியம் வசூலித்த தொகை ரூ. 13.23 கோடிகள் இன்றும் வாரியத்தால் பெறப்படவில்லை குறிப்பிட்டு எண்0020.

மின்சார வாரியத்திடம் உள்ள வைப்பு நிதிக்கான வட்டி மற்றும் மின்சார செலவுகள் கணக்கியல் நியமம் – 1 தெரிவிப்பு அறிக்கையின்படி.

3) <u>வருவாய் மற்றும் சரிபடுத்தும் பயன்படுத்தாத நிதிக்குள் உள்ள வேறுபாடு சமன் செய்வதை பற்றிய குறிப்பு:</u>

ஆண்டு 2012–13ல் கணக்கியல் மென்பொருள் பூனிக்ஸிலிருந்து ஆரக்கலுக்கு மாற்றப்பட்டது மற்றும் பத்து தொகுதிகள் பதினைந்து தொகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. இருப்பிலிருக்கும் வாடிக்கையாளர்கள் 15 தொகுதிகளுக்கு மாற்று பகிர்வு செய்யப்பட்டுள்ளனர். இதன் காரணமாக வருவாயின் ஒரு பகுதி குறிப்பிட்ட கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது தேதி 30.06.2014ல் எடுக்கப்பட்ட கணக்கு வழக்கின் ரூ. 13.10 கோடிகள் நின்றது மற்றும் இதன் விளைவாக இருப்பு நிலைப்பட்டியலில் ரூ. 4.46 கோடிகளை காட்டியது (சென்ற ஆண்டு ரூ.7.87 கோடி) பயன்படுத்தப்படாத பணம் மற்றும் வசூலை சரிக்கட்டிய பின் கணக்கு ரூ.83.37 கோடிகளாக இருந்தது இது கடந்த ஆண்டு ரூ.45.43 கோடிகளாக இருந்தது. இது தற்காலிக முறையில் செய்யப்பட்டது. மேலும் கணக்கு சமனும் செய்யப்பட்டது. இது தக்க தொகுதி வாரியான பயன்பாட்டாளர் கணக்குடன் ஒப்பீடு செய்யப்பட வேண்டும்.

4) <u>கட்டுப்பாடு கணக்குகளின் நிலுவை அறிக்கை :</u> பொதுவாக கட்டுப்பாடு கணக்குகள் நிலுவை சீரமைத்தல் சமசீரில் கட்டுப்பாடு கணக்குகளின் நிலுவை அறிக்கை சீரமைக்கப்பட வேண்டும்.

**எம்) <u>இதர சட்டவரை மற்றும் வரைமுறை தேவைகளை பற்றிய அறிக்கை</u>**

வாரியத்தால் தேதி 8 நவம்பர் 2016 முதல் 30 டிசம்பர் 2016 வரையிலான காலத்திற்குரிய குறிப்பிட்ட வங்கி குறிப்புகளில் பற்றுதல் மற்றும் கையாளுகை பற்றிய பொருளாதார அறிக்கையில் தேவையான வெளிபாடுகள் பதிவு செய்யப்பட்டது. எனினும் பகுதி அலுவலகம் 2,4,5,6,7,8,10,14

மற்றும் தர கட்டுப்பாடு அலுவலகம்சரியான கணக்காய்வு சாட்சியங்கள் இல்லாததால் அவர்களால் வெளியிட அறிக்கையும் கணக்கேடுகளும் பொருந்துகிறதா என அறிதியிட இயலவில்லை.

## 7. கருத்து

எங்களின் கருத்துப்படி, எங்களுக்கு அளிக்கப்பட்ட விவரங்கள், விளக்கங்கள் மற்றும் முக்கிய கணக்கு முறை கோட்பாடுகளின் அடிப்படையில் இந்த இருப்பு நிலைக் குறிப்பும், வரவு செலவு கணக்கும் பொதுவாக நடைமுறையிலுள்ள இந்தியாவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு கோட்பாடுகளுக்கு உகந்த வகையில் உண்மையான மற்றும் நியாயமான தகவல்களைத் தருவதாகக் கருதுகிறோம்.

I) இருப்பு நிலைக் குறிப்பு 31.03.2017 அன்று வாரியத்தின் செயல்பாட்டு நிலைமை களுக்கானது, மற்றும்

II) வாரியத்தின் வரவு செலவு கணக்கிலுள்ள பற்றாக்குறை (வருமானத்தை விட அதிக செலவு) அன்றைய தேதியில் முடிவடைந்த ஆண்டுக்கானதாகும்.

இதே தேதியிட்ட எங்களது அறிக்கையின் படி
எம்.சி. ரெங்கநாதன் மற்றும் குழுமம்
பட்டயக் கணக்காளர்கள்
பதிவு எண். 003061S

— ஒப்பம் —
டி.ஆர். சந்திரசேகரன்,
கூட்டாளி
உ.எண் 018137
த.ஆ.அ.எண் : 19018137AAAAAA1101

இடம் : சென்னை
நாள் : 03.09.2019

## 2017 – ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதிய இருப்பு நிலைக்குறிப்பு

| விவரங்கள் | அட்டவணை எண் | 2016–17 ரூபாய் | 2015–16 ரூபாய் |
|---|---|---|---|
| **பொறுப்புகள்** | | | |
| பங்குகள் | அ | 16,83,28,08,433.71 | 16,27,25,25,805.11 |
| அரசமானியம் | ஆ | 40,82,25,96,320.53 | 35,66,50,43,831.53 |
| நீண்டகாலக் கடன்கள் | இ | 11,37,61,29,329.00 | 11,77,32,79,935.00 |
| ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள வரவுகளும் வைப்புத் தொகைகளும் | ஈ | 11,70,69,42,802.54 | 10,23,51,91,921.54 |
| நடப்புப் பொறுப்புகளும் ஒதுக்கீடுகளும் | உ | 10,06,93,21,627.55 | 10,86,17,73,584.59 |
| மொத்தம் | | 90,80,77,98,513.33 | 84,80,78,15,077.77 |
| **சொத்துக்கள்** | | | |
| நிலையான சொத்துக்கள் | ஊ | 66,44,44,44,198.59 | 62,40,63,35,042.09 |
| நடப்புச் சொத்துக்கள், கடன்கள், முன்பணம் மற்றும் வைப்புத் தொகை | எ | 11,46,90,33,962.68 | 10,70,89,20,085.96 |
| சேர்ந்துள்ள பற்றாக்குறை | | 12,89,43,20,352.06 | 11,69,25,59,949.72 |
| மொத்தம் | | 90,80,77,98,513.33 | 84,80,78,15,077.77 |

இதே தேதியிட்ட எங்களது அறிக்கையின் படி
எம்.சி. ரெங்கநாதன் மற்றும் குழுமம்
பட்டயக் கணக்காளர்கள்
பதிவு எண். 003061S

வாரியத்திற்காக

— ஒப்பம்—
கே. முத்துக்குமாரசாமி
நிதி இயக்குநர்

— ஒப்பம்—
டாக்டர் ஹரிஹரன், இ.ஆ.ப.,
நிர்வாக இயக்குநர்

— ஒப்பம்—
டி.ஆர். சந்திரசேகரன்,
கூட்டாளி
உ.எண் 018137
த.ஆ.அ.எண் : 19018137AAAAAA1101

இடம் : சென்னை
நாள் : 03/09/2019

## 2017 – ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி முடிந்த ஆண்டின் வரவு–செலவு

| விவரங்கள் | அட்டவணை எண் | 2016–17 ரூபாய் | 2017–18 ரூபாய் |
|---|---|---|---|
| **வரவினங்கள்** | | | |
| குடிநீர் விற்பனை மற்றும் கழிவுநீர் கட்டணங்கள் | ஜி | 3,22,34,10,674.99 | 2,84,99,85,916.04 |
| குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி | எச் | 1,65,96,09,371.88 | 1,63,56,07,646.40 |
| அரசு மானியம் | | 3,04,88,34,930.00 | 3,87,45,24,763.00 |
| இதர வருமானம் | ஐ | 95,46,45,713.68 | 55,29,86,021.37 |
| முந்தையகால சரிக்கட்டல் கணக்கு | ஜே | 14,98,91,686.63 | 9,94,96,866.54 |
| ஐயப்பாடுள்ள கடன்களுக்குக் கூடுதல் ஒதுக்கீடு | | | |
| – குடிநீர்க் கட்டணம் அளவி பொருத்தப்பட்டது | | 43,30,702.96 | - |
| – குடிநீர்க் கட்டணம் அளவி பொருத்தப்படாதது | | 20,31,138.43 | - |
| வரவை விட செலவு அதிகம் | | 1,20,17,60,402.34 | 1,50,44,78,450.48 |
| மொத்தம் | | 10,24,45,14,620.91 | 10,51,70,79,663.83 |
| **செலவினங்கள்** | | | |
| இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | கே | 5,06,39,23,547.73 | 5,11,92,03,046.37 |
| பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஒதுக்கீடுகள் | எல் | 2,01,38,79,167.10 | 1,96,72,31,621.03 |
| அலுவலகம் மற்றும் நிர்வாகச் செலவுகள் | எம் | 8,73,69,002.19 | 9,54,04,334.95 |
| குடிநீர் சுத்தி வாடகைக் கட்டணங்கள்/ வறட்சி தணிப்புச் செலவுகள்/ வெள்ள நிவாரண செலவுகள் | என் | 75,57,79,615.11 | 80,55,10,804.39 |
| தேய்மானம் | | 1,54,67,55,386.27 | 1,66,85,93,676.09 |
| கடன் பணிச் செலவுகள் | ஓ | 76,80,50,718.00 | 81,92,04,509.00 |
| ஐயப்பாடுள்ள கடன்களுக்குக் கூடுதல் ஒதுக்கீடு | | | |
| – குடிநீர்க் கட்டணம் அளவி பொருத்தப்பட்டது | | - | 32,46,974.00 |
| – குடிநீர்க் கட்டணம் அளவிபொருத்தப்படாதது | | - | 65,86,829.00 |
| – வரிகள் | | 87,57,184.51 | 3,20,97,869.00 |
| மொத்தம் | | 10,24,45,14,620.91 | 10,51,70,79,663.83 |

இதே தேதியிட்ட எங்களது அறிக்கையின் படி
எம்.சி. செங்கோதுண் மற்றும் குழுமம்
பட்டயக் கணக்காளர்கள்
பதிவு எண். 003091S

வாரியத்திற்காக

— ஒப்பம்—
கே. முத்துக்குமாரசாமி
நிதி இயக்குநர்

— ஒப்பம்—
டாக்டர் ஹரிஹரன், இ.ஆ.ப.,
நிர்வாக இயக்குநர்

— ஒப்பம்—
டி.ஆர். சந்திரசேகரன்,
கூட்டாளி
உறுப்பினர் 018137
த.ஆ.அ.எண் : 19018137AAAAAA1101

இடம் : சென்னை
நாள் : 03/09/2019

## அட்டவணைகள்

### அட்டவணை – ஏ – பங்குகள்

| விவரங்கள் | 2016–17 ரூபாய் | 2015–16 ரூபாய் |
|---|---|---|
| அரசிடமிருந்து பங்குகள் | 4,87,96,58,365.32 | 4,87,96,58,365.32 |
| பொதுமக்களிடமிருந்து பங்குகள் | 6,93,54,03,682.02 | 6,93,12,77,387.02 |
| சென்னை மாநகராட்சியிடமிருந்து மாற்றப்பட்ட பொறுப்புகளை விட அதிக சொத்துக்கள் | 15,91,67,365.25 | 15,91,67,365.25 |
| பொதுப்பணித்துறையிலிருந்து மாற்றப்பட்ட பொறுப்புகளை விட அதிக சொத்துக்கள் | 5,18,87,380.46 | 5,18,87,380.46 |
| தற்காலிக வாரியத்திலிருந்து மாற்றப்பட்ட பொறுப்புகளைவிட அதிக சொத்துக்கள் | 8,42,251.86 | 8,42,251.86 |
| உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து மாற்றப்பட்ட சொத்துக்களை விட அதிக பொறுப்புகள் | -43,69,42,738.80 | -43,69,42,738.80 |
| மூலதன ஒதுக்கீடு | 4,13,72,24,624.60 | 3,58,10,68,291.00 |
| நிலையான சொத்துக்களை புதுப்பித்தல் நிதி | 1,10,55,67,503.00 | 1,10,55,67,503.00 |
| மொத்தம் | 16,83,28,08,433.71 | 16,27,25,25,805.11 |

### அட்டவணை – பி – அரசு மானியம்

| விவரங்கள் | 2016–17 ரூபாய் | 2015–16 ரூபாய் |
|---|---|---|
| இரண்டாவது சென்னைக் குடிநீர்த் திட்டம் | 1,37,37,90,000.53 | 1,37,37,90,000.53 |
| சென்னை மாநகர நதிநீர் பாதுகாப்புத் திட்டம் | 3,51,59,00,000.00 | 3,51,59,00,000.00 |
| ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் | 3,02,51,08,485.00 | 3,02,51,08,485.00 |
| நெம்மேலி கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் | 8,93,22,04,351.00 | 8,92,63,84,351.00 |
| இதர வகைகள் | 11,39,89,22,686.00 | 7,78,68,77,325.00 |
| சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் திட்டம் | 6,75,00,39,278.00 | 5,98,58,00,000.00 |
| 45 எம்.எல்.டி. [illegible] | 36,39,40,000.00 | 0.00 |
| உள்ளாட்சி மானியங்கள் | 1,90,34,07,692.00 | 1,90,34,07,692.00 |
| பொறுப்புரிமை மற்றும் நிதி | 3,55,92,83,828.00 | 3,14,77,75,978.00 |
| மொத்தம் | 40,82,35,96,230.53 | 35,66,60,44,231.53 |

### அட்டவணை – சி – நீண்ட கால கடன்கள்

| விவரங்கள் | 2016–17 ரூபாய் | 2015–16 ரூபாய் |
|---|---|---|
| அரசிடமிருந்து கடன்கள் | 7,27,51,13,540.00 | 7,27,51,13,540.00 |
| நிதிநிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன் | 4,10,10,15,789.00 | 4,49,81,66,395.00 |
| மொத்தம் | 11,37,61,29,329.00 | 11,77,32,79,935.00 |

## அட்டவணை – டி – நிறுத்தி வைக்கப்பட்ட வரவுகளும் வைப்புத் தொகைகளும்

| விவரங்கள் | 2016–17 ரூபாய் | 2015–16 ரூபாய் |
|---|---|---|
| (I) பொறுப்பாளர்களிடமிருந்து வைப்புத் தொகை | | |
| – இணைப்புப் பணிகளுக்கு – கழிவுநீர் | 54,62,30,204.00 | 41,66,664.00 |
| – பொதுப்பணிகளுக்கு | 10,56,89,48,788.21 | 9,58,76,69,370.21 |
| – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 5,52,02,426.00 | 5,22,02,426.00 |
| (II) பிணை வைப்புத் தொகைகள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட பணம் | | |
| அ. நிறுத்தி வைக்கப்பட்ட பணம் | | |
| – பொருட்கள் வழங்குபவர்கள் | 3,05,58,273.00 | 2,86,93,354.00 |
| – ஒப்பந்தக்காரர்கள் | 4,04,09,086.00 | 3,33,81,611.00 |
| ஆ. பிணை வைப்புத் தொகைகள் | | |
| – பணியாளர்கள் | 66,597.40 | 66,597.40 |
| – நுகர்வோர்கள் | 1,16,74,109.00 | 1,16,74,109.00 |
| – ஒப்பந்தக்காரர்கள் | 45,38,52,118.93 | 51,73,36,589.93 |
| – இதர வகைகள் | 1,200.00 | 1,200.00 |
| மொத்தம் | 11,70,69,42,802.54 | 10,23,51,91,921.54 |

## அட்டவணை – இ – நடப்பு பொறுப்புகள்

| விவரங்கள் | 2016–17 ரூபாய் | 2015–16 ரூபாய் |
|---|---|---|
| (அ) கடனீந்தோர்: | | |
| – பொருட்கள் வழங்குபவர்கள் | 6,98,64,223.26 | 10,70,43,045.24 |
| – ஒப்பந்தக்காரர்கள் | 83,51,00,677.95 | 96,01,89,022.00 |
| – சேவைகள் | 60,18,43,780.50 | 55,33,35,200.30 |
| முதலீடு சேர்ந்த வட்டி | | |
| – அரசுக் கடன்களுக்கு | 7,43,23,09,005.00 | 6,81,82,62,710.00 |
| – நிதிநிறுவனக் கடன்களுக்கு | 13,94,66,960.00 | 14,69,75,624.00 |
| (ஆ) இதர பொறுப்புகள் | | |
| – பணியாளர்கள் | 1,48,43,43,100.61 | 1,49,95,10,861.28 |
| – மற்றவை | -49,36,06,119.77 | 77,64,57,121.77 |
| மொத்தம் | 10,06,93,21,627.55 | 10,86,17,73,584.59 |

## அட்டவணை – எப் – நிலையான சொத்துக்கள்

| விவரங்கள் | ரூபாய் | 2016–17 ரூபாய் | 2018–19 ரூபாய் |
|---|---|---|---|
| அ. அடிக்கட்டமைப்புக் குடிநீர் வழங்கல் | 31,82,70,00,022.20 | | |
| கழிக்க: தேய்மானம் | -13,92,94,36,409.39 | 17,89,75,63,612.81 | 18,61,27,95,288.56 |
| | | | |
| ஆ. அடிக்கட்டமைப்புக் கழிவுநீரகற்றல் | 14,31,12,71,163.72 | | |
| கழிக்க: தேய்மானம் | -6,94,54,62,453.54 | 7,36,58,08,710.18 | 7,75,44,90,710.36 |
| | | | |
| இ. அடிக்கட்டமைப்புப் பொதுவானவை | 86,24,05,926.89 | | |
| கழிக்க: தேய்மானம் | -59,58,63,556.72 | 26,65,42,370.17 | 25,33,45,432.40 |
| | | | |
| ஈ. முன்னேற்றத்திலுள்ள திட்டங்கள் | | | |
| 1. குடிநீர் வழங்கல் இதர பணிகள் | | | |
| – வைப்புத் தொகை பணிகள் | 4,19,67,20,153.09 | | |
| – இதர பணிகள் | 17,84,12,42,606.12 | 22,03,79,62,759.21 | 19,75,52,40,376.96 |
| | | | |
| 2. கழிவுநீரகற்றல் | | | |
| – வைப்புத் தொகை பணிகள் | 8,03,50,98,771.07 | | |
| – இதர பணிகள் | 9,31,90,78,350.67 | 17,35,41,77,121.74 | 14,47,70,75,416.51 |
| | | | |
| 3. பொதுவானவை | | 19,10,26,829.32 | 22,36,40,103.14 |
| | | | |
| உ. வறட்சி / வெள்ள நிவாரணப் பணிகள் | | 1,10,78,50,680.82 | 1,10,62,35,599.82 |
| ஊ. வறட்சி நிவாரணப் பணிகள் – பொதுவானவை | | 22,35,12,114.34 | 22,35,12,114.34 |
| | | | |
| மொத்தம் | | 66,44,44,44,192.59 | 62,40,62,25,042.09 |

## அட்டவணை – ஜி – நடப்பிலுள்ள சொத்துக்கள், கடன்கள் முன்பணம் மற்றும் வைப்புத் தொகைகள்

| விவரங்கள் | ரூபாய் | 2016–17 ரூபாய் | 2015–16 ரூபாய் |
|---|---|---|---|
| அ. பொருட்கள் | | 11,41,57,279.60 | 8,31,80,462.84 |
| ஆ. கடனாளிகள் | | | |
| 1. குடிநீர் கட்டணங்கள் அளவி பொருத்தப்பட்டது | 27,16,40,265.81 | | |
| கழிக்க: ஐயப்பாடுள்ள பற்று – ஒதுக்கீடு | -6,51,56,630.22 | 20,64,83,635.59 | 18,04,99,417.83 |
| 2. குடிநீர் கட்டணங்கள் அளவி பொருத்தப்படாதது | 37,59,40,700.01 | | |
| கழிக்க: ஐயப்பாடுள்ள பற்று – ஒதுக்கீடு | -18,42,25,890.41 | 19,17,14,809.60 | 16,93,72,286.91 |
| 3. வரிகள் | 1,63,42,58,666.13 | | |
| கழிக்க: ஐயப்பாடுள்ள பற்று – ஒதுக்கீடு | -12,25,22,272.44 | 1,51,17,36,393.69 | 1,43,29,21,733.15 |
| 4. பொது ஆணைக்குழுக்களிடமிருந்து வரவேண்டியவை | | 1,99,56,271.27 | 1,99,56,271.27 |
| 5. கட்டண கடனாளிகள் | | | |
| – அரசுக்கு வாரிய மூலம் குடிநீர் வழங்கல் | 15,00,71,083.26 | | |
| – கழிவுநீர் சேவை கட்டணங்கள் | 24,29,56,514.58 | | |
| – குடிநீர் இதர வகைகள் | -94,820.50 | | |
| – மேல்வரி | 21,31,44,014.45 | | |
| – அபிவிருத்தி வரியோலை | 3,56,690.00 | | |
| – சுத்திகரிக்கப்படாத கழிவு | 5,77,48,372.90 | 66,41,81,854.69 | 61,79,47,112.14 |
| பொறுத்தக வாடகை | | 1,48,37,580.18 | 1,28,82,739.00 |
| செ.கு.வா. பணிக்கொடை பொ. குழுமம் | | 1,20,34,006.50 | 1,21,17,987.50 |
| வரி பிடித்தங்கள் | | 3,68,24,743.70 | 3,74,54,470.70 |
| – தலைமை அலுவலக / பகுதி அலுவலக நடவடிக்கை | | 2,66,81,84,880.50 | 1,00,98,04,477.34 |
| வருகை கட்டுப்பாடு | | 2,63,47,011.40 | -4,07,36,235.13 |
| இ. கையிருப்பு மற்றும் வங்கி இருப்புகள் | | | |
| அட்டவணையிடப்பட்ட வங்கிகளில் நடப்புக்கணக்கு மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி இருப்பு கணக்கு | | -2,26,23,05,709.64 | 68,92,86,250.26 |
| அட்டவணையிடப்பட்ட வங்கிகளில் குறுகிய கால வைப்புத் தொகை | | 4,06,48,45,571.00 | 3,06,63,18,075.00 |
| கையிருப்புத் தொகை | | 15,535.35 | 70,943.35 |
| பணியாளர் முன்பணம் | | 1,79,669.00 | 1,04,892.00 |

| விவரங்கள் | ரூபாய் | 2016—17 ரூபாய் | 2015—16 ரூபாய் |
|---|---|---|---|
| ஈ. கடன் மற்றும் முன்பணம் | | | |
| 1. ஒப்பந்தக்காரர்கள் | | 54,30,27,797.00 | 14,78,72,342.00 |
| 2.பொருள் வழங்குபவர்கள் | | 1,21,02,404.40 | 1,46,53,075.40 |
| 3.செலவினங்களுக்கு | | 1,76,20,379.60 | 1,62,60,398.60 |
| 4.பணியாளர்கள் | | 8,19,06,053.29 | 8,33,48,012.29 |
| 5.இதர வகை | | 4,99,449.79 | 4,99,449.79 |
| உ. வைப்புத்தொகை மற்றும் முதலீடு | | | |
| அ. பணியாளர்கள் | | | |
| 1. சிறப்பு சேமநல முதலீடு | | 6,99,28,354.00 | 6,70,55,538.00 |
| 2. பொது சேமநல முதலீடு | | 77,93,15,416.34 | 75,81,37,207.34 |
| 3. ஓய்வூதிய நிதி முதலீடு | | 1,39,00,42,346.00 | 1,36,94,51,430.00 |
| 4. செபெகுவா பணியாளர் சிறப்பு மருத்துவ நலநிதி | | 1,78,39,787.00 | 1,68,88,420.00 |
| 5. விபத்து உள்ளடக்கிய முதலீடு | | 1,12,51,069.00 | 1,05,38,569.00 |
| 6. அதிகரித்த வட்டி – மற்றவை | | -1,61,08,133.32 | -12,57,93,872.35 |
| 7. அதிகரித்த வட்டி – சிபிஎஸ் நிதி முதலீடு | | 49,06,306.78 | -25,52,17,782.73 |
| 8. அதிகரித்த வட்டி – ஓய்வூதிய முதலீடு | | -13,32,05,583.09 | -15,27,987.00 |
| ஆ. மற்றவை | | | |
| 1. வைப்புத்தொகை | | 14,70,04,269.46 | 13,56,60,674.46 |
| 2. பொறுப்பாட்சி மற்றும் நிறுத்தி வைத்தல் முதலீடு | | 50,68,02,444.00 | 47,09,29,600.00 |
| 3. நிலையான சொத்து புதுப்பித்தல் நிதி முதலீடு | | 76,69,08,070.00 | 70,89,84,127.00 |
| மொத்தம் | | 11,46,90,33,962.68 | 10,70,09,20,085.96 |

## அட்டவணை – எச் – குடிநீர் விற்பனை மற்றும் கழிவுநீர் கட்டணங்கள்

| விவரங்கள் | 2016–17 ரூபாய் | 2017–18 ரூபாய் |
|---|---|---|
| அ) அளவி பொருத்தப்பட்டவை | | |
| வீட்டு உபயோகம் | 38,18,02,234.25 | 15,59,85,585.00 |
| வாணிபம் | 1,22,61,82,392.75 | 1,19,51,20,615.22 |
| நிறுவனங்கள் | 13,23,57,164.75 | 12,13,80,862.00 |
| நகராட்சிகள் | 9,20,35,763.00 | 8,73,65,796.00 |
| ஆ) அளவி பொருத்தப்படாதவை | | |
| வீட்டு உபயோகம் | 37,50,64,952.07 | 35,91,26,154.00 |
| வாணிபம் | 19,99,43,611.00 | 19,74,01,212.00 |
| நிறுவனங்கள் | 21,39,200.00 | 21,28,080.00 |
| சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் வழங்கல் | 14,95,08,142.08 | 14,50,88,097.25 |
| லாரிகள் மூலம் குடிநீர் வழங்கல் | 38,21,09,406.94 | 38,47,35,788.00 |
| கழிவுநீர் கட்டணங்கள் | 28,22,67,808.15 | 20,16,53,726.57 |
| மொத்தம் | 3,22,34,10,674.99 | 2,84,99,85,916.04 |

## அட்டவணை – ஐ – குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி

| விவரங்கள் | 2016–17 ரூபாய் | 2017–18 ரூபாய் |
|---|---|---|
| குடிநீர் வரி | 35,56,31,467.24 | 34,96,69,430.98 |
| கழிவுநீரகற்றுவரி | 1,30,39,77,904.64 | 1,28,59,38,215.42 |
| மொத்தம் | 1,65,96,09,371.88 | 1,63,56,07,646.40 |

## அட்டவணை – ஜே – இதர வருமானம்

| விவரங்கள் | 2016–17 ரூபாய் | 2017–18 ரூபாய் |
|---|---|---|
| விண்ணப்பக் கட்டணம் – ஆர் எடுப்பு | 1,97,91,536.94 | 0.00 |
| பயனற்ற பொருட்கள் விற்பனை | 47,31,455.00 | 11,79,500.00 |
| வங்கியிலிருந்து வட்டி | 56,06,13,682.70 | 20,96,27,954.00 |
| இதர வட்டி | 4,05,63,507.00 | 7,12,71,168.20 |
| ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்கள் விற்பனை | 35,56,700.00 | 3,47,600.00 |
| சரி செய்யப்பட்ட இழப்பீடு | 6,78,14,912.00 | 2,85,10,052.00 |
| ஈட்டிய ஆலோசனைக் கட்டணம் | 0.00 | 66,39,800.00 |
| இதர பல்வகைப்பட்ட வருமானம் | 25,75,73,920.04 | 23,54,09,947.17 |
| மொத்தம் | 95,46,45,713.68 | 55,29,86,021.37 |

## அட்டவணை – கே – இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள்

| விவரங்கள் | 2016–17 ரூபாய் | 2017–18 ரூபாய் |
|---|---|---|
| அ. இயக்குதல் செலவுகள் | | |
| மின்சக்தி | 1,76,02,80,711.00 | 1,81,53,40,239.00 |
| இராசாயனப் பொருட்கள் | 4,93,06,738.37 | 2,92,40,776.16 |
| எரிபொருள் மற்றும் மசகுகள் | 7,78,50,227.00 | 7,66,62,579.19 |
| கழிக்க: திட்ட ஒதுக்கீடுகள் | -2,33,55,068.00 | -2,29,98,774.00 |
| உதிரிக் கருவிகள் | 9,73,436.09 | 18,05,277.35 |
| சுமைக் கட்டணமும் காப்பீடும் | 5,233.00 | 0.00 |
| கழிவுநீர் லாரி – வாடகைக் கட்டணம் | 1,88,21,185.00 | 1,77,95,224.00 |
| தூர் எடுப்பு | 12,52,78,868.80 | 10,01,18,519.00 |
| இதர இயக்குதல் செலவுகள் | 1,86,45,98,759.32 | 1,90,93,51,188.54 |
| மொத்தம்–அ | 3,87,37,60,090.58 | 3,92,73,15,029.24 |
| ஆ. பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் | | |
| குழாய் வழிகள், நீரேற்றும் நிலையம், தளவாடம் மற்றும் இதர உபகரணங்கள் | 73,98,37,375.95 | 75,56,88,849.53 |
| கட்டடம் மற்றும் கட்டடப் பணிகள் | 18,90,01,030.54 | 18,37,43,452.51 |
| வாகனங்கள் | 25,50,711.19 | 25,94,687.00 |
| இதர பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | 25,87,74,339.47 | 24,98,61,028.09 |
| மொத்தம்–ஆ | 1,19,01,63,457.15 | 1,19,18,88,017.13 |
| | | |
| மொத்தம் (அ + ஆ) | 5,06,39,23,547.73 | 5,11,92,03,046.37 |

## அட்டவணை – எல் – பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஒதுக்கீடுகள்

| விவரங்கள் | 2016–17 ரூபாய் | 2017–18 ரூபாய் |
|---|---|---|
| ஊதியம், கூலி மற்றும் படிகள் | 2,53,63,07,316.70 | 2,45,50,13,938.18 |
| பணியாளர் நலச் செலவுகள் | 8,24,66,220.40 | 9,91,85,261.85 |
| அயல்துறை பணியிலிருந்து வந்தவருக்குப் பங்களிப்பு | 16,86,176.00 | 21,73,668.00 |
| மொத்தம் | 2,62,04,59,713.10 | 2,55,63,72,868.03 |
| கழிக்க: திட்ட ஒதுக்கீடுகள் | -60,65,80,546.00 | -58,91,41,247.00 |
| | | |
| மொத்தம் | 2,01,38,79,167.10 | 1,96,72,31,621.03 |

## அட்டவணை – எம் – அலுவலகம் மற்றும் நிர்வாகச் செலவுகள்

| விவரங்கள் | 2016–17 ரூபாய் | 2017–18 ரூபாய் |
|---|---|---|
| அலுவலகச் செலவுகள்: | | |
| வாடகை மற்றும் வரி | 81,87,395.00 | 83,84,173.00 |
| மின் கட்டணம் | 1,84,81,982.00 | 1,74,87,045.00 |
| கம்பியில்லாத தந்தி, தகவல் தொடர்பு செலவு | 7,77,670.00 | 2,04,713.00 |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 98,57,511.24 | 96,80,182.26 |
| தபால் மற்றும் தந்திகள் | 94,21,848.00 | 77,55,786.00 |
| அச்சிடுதல் மற்றும் எழுது பொருட்கள் | 1,00,23,687.40 | 1,46,73,852.20 |
| பொருட்காட்சி மற்றும் விளம்பரம் | 12,65,192.00 | 32,84,181.00 |
| இதர அலுவலகச் செலவுகள் | 1,83,60,455.00 | 1,73,11,701.33 |
| பயணம் மற்றும் பயணப்படிச் செலவுகள் | 3,10,67,606.00 | 3,83,39,780.00 |
| நிர்வாகச் செலவுகள் | | |
| தணிக்கைக் கட்டணங்கள் | 1,90,000.00 | |
| வழக்குகளுக்குச் செலவுகள் | 18,34,655.00 | 1,79,315.00 |
| ஆலோசனைக் கட்டணங்கள் மற்றும் செலவுகள் | 12,75,065.00 | 12,65,007.00 |
| வாரிய செயல்பாடு | 500.00 | 11,77,896.00 |
| வங்கிக் கட்டணம் | 25,83,919.55 | 16,55,518.63 |
| மதிப்பூதியம் | 0.00 | 7,640.00 |
| பிற நிர்வாகச் செலவுகள் | 76,39,565.00 | 78,63,207.53 |
| பொறுப்புறுதி ஆணையக் கணக்கு | 44,52,088.00 | 48,65,248.00 |
| மொத்தம் | 12,54,19,139.19 | 13,41,35,245.95 |
| கழிக்க : திட்ட ஒதுக்கீடு | -3,80,50,137.00 | -3,87,30,911.00 |
| | | |
| மொத்தம் | 8,73,69,002.19 | 9,54,04,334.95 |

## அட்டவணை – எண் – முந்தைய கால சரிகட்டிய கணக்கு

| விவரங்கள் | 2016–17 ரூபாய் | 2017–18 ரூபாய் |
|---|---|---|
| அ) பற்று | | |
| குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வரி | 89,07,13,392.06 | 19,76,44,367.04 |
| குடிநீர்க் கட்டணம் – அளவி பொருத்தப்படாதது | 4,78,90,210.50 | 5,97,93,856.75 |
| குடிநீர்க் கட்டணம் – அளவி பொருத்தப்பட்டது | 1,85,41,692.23 | 1,49,74,223.59 |
| கழிவு நீர்க் கட்டணம் | 2,45,25,200.37 | 2,93,80,481.38 |
| தேய்மானம் | 73,70,411.58 | 13,69,97,678.45 |
| இதர செலவுகள் | 3,04,500.02 | 20,000.00 |
| மொத்தம் – அ | 98,93,45,406.76 | 43,88,10,607.21 |
| ஆ) வரவு | | |
| குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வரி | 1,01,52,62,680.29 | 35,29,24,838.20 |
| குடிநீர்க் கட்டணம் – அளவி பொருத்தப்படாதது | 7,14,39,829.99 | 10,62,38,902.49 |
| குடிநீர்க் கட்டணம் – அளவி பொருத்தப்பட்டது | 1,76,84,813.38 | 2,68,35,292.63 |
| கழிவு நீர்க் கட்டணம் | 3,48,49,769.73 | 5,23,08,440.43 |
| மொத்தம் – ஆ | 1,13,92,37,093.39 | 53,83,07,473.75 |
| மொத்தம் – அ+ஆ | -14,98,91,686.63 | -9,94,96,866.54 |

## அட்டவணை – ஒ – கடன் மீதான வட்டி

| விவரங்கள் | 2016–17 ரூபாய் | 2017–18 ரூபாய் |
|---|---|---|
| அரசுக்கடன் வட்டி | 61,40,46,295.00 | 61,40,46,292.00 |
| தனியார் நிதி நிறுவனங்கள் வட்டி | 24,85,44,311.00 | 29,27,22,256.00 |
| மொத்தம் | 86,25,90,606.00 | 90,67,68,548.00 |
| கழிக்க: வட்டி முதலாக்கம் | 9,45,39,888.00 | 8,75,64,039.00 |
| மொத்தம் | 76,80,50,718.00 | 81,92,04,509.00 |

## அட்டவணை – பி
## குறிப்பிடத்தக்க கணக்குமுறைக் கோட்பாடுகள்

1. **கணக்குமுறைக் கோட்பாடு:**

நிதிநிலை அறிக்கை வரலாறுமிக்க அடக்கவிலை கருத்து மற்றும் நிறுவன தொடர்ச்சி அனுமானம் ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்படுகிறது. ஈட்டிய ஆதாயத்தின் அடிப்படையிலான கணக்குமுறையை சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் பின்பற்றுகிறது.

பொதுமக்களின் பங்களிப்பு குடிநீர் / கழிவுநீர் இணைப்புப் பணிகளுக்காக பொதுமக்களிடமிருந்து கடந்த நிதியாண்டில் பெறப்பட்ட தொகை அடுத்த நிதி ஆண்டில் பொதுமக்களின் பங்குக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.

2. **சரக்கு மதிப்பீடு:**

பண்டக சாலையில் உள்ள பொருட்களின் அடக்கவிலை நிறையிட்ட சராசரி முறையில் கணக்கிடப்படுகிறது.

3. **இருப்புநிலைக் குறிப்பிற்குப் பின் நிகழ்ந்த நிகழ்வுகள்:**

இருப்புநிலைக் குறிப்பிற்குப் பின் நிகழ்ந்த நிகழ்வுகள் என்பது இருப்புநிலை குறிப்பு தேதி மற்றும் நிதி அறிக்கை அங்கீகரிக்கப்பட்ட நாட்களுக்கு இடையே நிகழ்ந்த நிகழ்வுகள்.

4. **முந்தைய கால வகைகள்:**

முந்தைய ஆண்டு நிதி அறிக்கைகள் தயாரிப்பதில் உள்ள வரவு, செலவு பிழைகள் நடப்பு ஆண்டில் குறிப்பிடுவது முந்தைய காலச் சரி கட்டுதல் ஆகும். முந்தைய ஆண்டிற்கான வரவு செலவு வைப்பு கணக்கையும் தேவையிருந்தால் ஏற்றுக்கொள்ளலாம். மேலும் வரவு செலவு தொடர்பான முந்தைய ஆண்டுகளோடு தொடர்புடைய இந்த ஆண்டு செலவுகள் கூட முந்தைய வகைகளாக கருதப்படுகிறது.

5. **தேய்மானம்:**

அசையாச் சொத்துக்களின் தேய்மானம் ஒரே தொகை முறையில் பதிவு செய்யப்படுகின்றன, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட உரிய தேய்மான விகிதப்படி தேய்மானம் கணக்கிடப்பட்டுள்ளது. சொத்துக்களின் தேய்மானம் வருடத்தில், செப்டம்பர் 30ம் தேதிக்கு முன் கணக்கில் கொள்ளப்பட்ட சொத்துக்களுக்கு ஒரு வருட தேய்மானமும், அக்டோபர் மாத ஆரம்பத்தில் இருந்து மார்ச் மாதம் முடிய புதியதாக சேர்த்துக்கொள்ளப்பட்ட சொத்துக்களுக்கு அரை ஆண்டு தேய்மானமும் கணக்கிடப்படுகிறது. மார்ச் மாதத்தில் சேர்க்கப்பட்ட சொத்துக்களுக்கு தேய்மானம் விடுவிக்கப்பட்டுள்ளது. முன்னேற்றத்தில் உள்ள திட்டப்பணிகள் முடிவடைந்து உபயோகத்திலுள்ள சொத்துக்களின் தேய்மானம் முடிப்பதற்காக காத்திருந்த போதிலும் (நேர்கோட்டு முறையில்) ஒரே தொகை முறையில் 5 சதவிகிதமும் கணக்கிடப்படுகிறது.

6. **வருவாய் ஏற்பு:**

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் ஈட்டிய ஆதாயத்தில் அடிப்படையிலான கணக்குமுறையை பின்பற்றுகிறது. ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாவிதமான வரவுகளும் செலவினங்களும் வரவேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்கு அடிப்படையில் நடப்பு ஆண்டில் கணக்கிடப்பட்டுள்ளது. பணியாளர்களின் கடனுக்கான வட்டி மற்றும் ஓய்வூதிய கால பலன்கள் ரொக்கமாக கணக்கிடப்பட்டுள்ளது.

7. **ஐயப்பாடுள்ள கடன்கள்:**

குடிநீர் வரி மற்றும் குடிநீர்க் கட்டணம் செலுத்தும் சில்லறைக் கடனாளிகள் ஐயப்பாடுள்ள கடன்களுக்காக, அளவுமானி உள்ளோருக்கும், அளவுமானி இல்லாதோருக்கும் முறையே 20 சதவீதம் மற்றும் 10 சதவீதமும் மற்றும் வரிகளுக்கு 10 சதவீதமும் வேறுபடும் தொகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. **அசையாச் சொத்து :**

அசையாச் சொத்து எனப்படுவது கொள்முதல் விலை அல்லது கட்டமைப்பு செலவிலிருந்து வந்த அசையாச் சொத்தின் மீதான தொடர் தேய்மான மதிப்பீட்டை கழிக்கப் பெறுவது ஆகும். அசையா சொத்துக்கான செலவு எனப்படுவது அடிப்படை செலவு மற்றும் நிறுவனத்திற்காக செலவழிக்கப்படும் செலவு முதல் அதை பயன்பாட்டுக்கு கொண்டு வரும் வரை செலவழிக்கப்படும் அனைத்து செலவுகளை உள்ளடக்கியது ஆகும். திட்டவளர்ச்சி செலவினங்கள் திட்டத்தை நடைமுறை படுத்துவதற்காக செய்யப்படும் அனைத்து செலவினங்களையும் குறிக்கும். திட்டத்தை நடைமுறை படுத்துவதற்காக கொடுக்கப்படும் ஊதியம், சம்பளம், மற்றும் இதரபடிகள், அலுவலக செலவுகள், நிர்வாகச் செலவுகள், எரிபொருள் மற்றும் பசை ஆகியவற்றில் விகிதாச்சாரம் வாரியத்தால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

9. **மானியம் :**

அரசிடமிருந்து பெறப்படும் மானியம் தனியாக காண்பிக்கப்படுகிறது. இந்த வகையான மானியத்திற்காக தொகை ஏதும் திரும்பி செலுத்தப்பட்டதாக தெரியவில்லை.

10. **முதலீடுகள் :**

பொதுவாக முதலீடு எனப்படுவது ரொக்கமாக வங்கிகளில் செலுத்தப்படும் குறித்த கால வைப்பு தொகை. அந்த வைப்பு தொகை மீது பெறப்படும் வட்டி, வரவு மற்றும் செலவு கணக்குகளில் வரவு வைக்கப்படும். இந்த வைப்பு தொகை அல்லாத மற்ற நிதிகள் அல்லது வளர்ச்சி திட்ட முதலீடுகள் மீது பெறப்படும் வட்டி அந்த நிதி திட்ட முதலீடு கணக்கில் வரவு வைக்கப்படும்.

11. **ஓய்வூதிய பணியாளர்களின் பலன்கள்:**

பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வு கால நிதி நலன்கள் ரொக்க அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

**12. கடன்களின் மதிப்பு:**

சொத்து வாங்குவதற்காக வாங்கும் கடன் மீதான செலவுகளையும் அந்த சொத்து மதிப்பின் மீது முதலீடு செய்யப்படும்.

**13. ஒதுக்கீடு, நிச்சயமற்ற பொறுப்புகள்:**

வாரியத்திற்கு எதிரான நீதிமன்றத்திலுள்ள ஒவ்வொரு வழக்கும் சட்டபடியாக உண்மையான மதிப்பாய்வு செய்யப்பட்ட போதும் வாரியம் கடனாக ஏற்றுக் கொள்ளாமல் சில்லறைக் செலவினப் பொறுப்பாக வைத்துள்ளது.

**14. சரிசெய்யப்பட்ட இருப்பீடுகள்:**

சரிசெய்யப்பட்ட இருப்பீடுகள் இதர வருமானமாக கருத பட வேண்டும்.

## அட்டவணை – கே
## 2017 மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகள் மீதான குறிப்புகள்
## இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்புகள்

**I. அட்டவணை – எ – பங்குகள் – பொதுவான பங்களிப்புகள்**

**1. பொதுமக்களிடமிருந்து பெறப்படும் பங்குகள்:**

குடிநீர் / கழிவு நீர் இணைப்பு பணிகளுக்காக பொது மக்களிடமிருந்து கடந்த நிதியாண்டில் பெறப்பட்ட கட்டண தொகையான ரூ.893.54 கோடி (சென்ற ஆண்டு –ரூ.893.13 கோடி) நடப்பு ஆண்டில் பொதுமக்களின் பங்குக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

**2. இருப்பு கடனுக்கு மிஞ்சிய சொத்துக்கள் :**

சென்னை மாநகராட்சி, பொதுப்பணித்துறை மற்றும் இடைக்கால வாரியம் போன்றவற்றிலிருந்து முறையே ரூ. 15.82 கோடி, ரூ. 5.19 கோடி மற்றும் ரூ. 0.06 கோடி பெறப்பட்ட கடன் பொறுப்புகளுக்கும் மிகையான தொகை என குறிப்பிடப்பட்ட தொகை சென்னைக் குடிநீர் வாரியத்தில் நீண்டகாலமாக தொடர்ந்து நிலுவையில் இருந்து வருகிறது. இந்த தொகைகள் அட்டவணை – எ – பங்குகள் முந்தைய ஆண்டுகளின் நடைமுறைகளின் படி காட்டப்பட்டுள்ளது.

**3. சொத்துக்களுக்கு மிஞ்சிய கடன்கள்:**

முன்னாள் 42 உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து மாற்றப்பட்ட சொத்துக்கள் மீதான அதிகபடியான கடன்கள், 31 மார்ச் 2017ன் நிலவரப்படி மொத்தக்கூட்டு தொகையான ரூ.43.69 கோடி (சென்ற ஆண்டு ரூ. 43.69 கோடி) முன்னாள் வழக்கப்படி அட்டவணை எ – பங்களிப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

**4. மூலதன இருப்புகள்:**

முன்னாள் வழக்கப்படி சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் வாயிலாக பெறப்பட்ட உள்கட்டமைப்பு மேம்பாட்டு கட்டணம் மற்றும் நடப்பு ஆண்டில் விண்ணப்பதாரர்கள் மூலம் பெறப்பட்ட கட்டணம் ரூபாய் 55.62 கோடி (கடந்த ஆண்டு – ரூ. 47.23 கோடி) மூலதன இருப்பு கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

**5. நிதி:**

நிலையான சொத்துக்களை புதுப்பிக்கும் நிதி ரூ. 110.56 கோடிகளை நிதியாக கொண்டு மேற்கூறிய நிதியிலிருந்து நடப்பு ஆண்டில் ரூ. 76.69 கோடி முதலீடாக்கப்பட்டுள்ளது. இதில் மீதமுள்ள நிதி கடந்த ஆண்டுகளின் அசையா சொத்துகளுடன் கூடுதலாக பயன்படுத்தாத நிதியாக கருதப்பட்டுள்ளது.

**II. அட்டவணை – பி – அரசு மானியங்கள் – ரூ. 4092.26 கோடி (சென்ற ஆண்டு 3569.50 கோடி)**

சென்னை நகர குடிநீர் திட்டம் II, சென்னை நகர நதிநீர் பாதுகாப்புத் திட்டம், நகர உள்ளாட்சி மானியங்கள் திட்டம், போன்ற வெவ்வேறு திட்டங்களுக்கு அரசிடமிருந்து பெறப்பட்ட மானியங்கள் தனித்தனியே கீழ்கண்டவாறு காண்பிக்கப்பட்டுள்ளது.

1. **அரசு மானியம் (சென்னை நகர குடிநீர் திட்டம் II மற்றும் சென்னை நகர நதிநீர் பாதுகாப்புத் திட்டம்) – ரூ. 488.97 கோடி (சென்ற ஆண்டு – 488.97 கோடி)**

மார்ச் 31, 2017 அன்றைய நிலவரப்படி நிலுவையிலுள்ள மீதம் இருப்பு தொகை சென்னை நகர குடிநீர் திட்டம் II 2008–09க்கு முன்பு உள்ளபடி ரூ. 137.38 கோடி என்ற தொகையாகவும் மற்றும் சென்னை நகர நதிநீர் பாதுகாப்புத் திட்டத்திற்கு 2009–10லிருந்து தொடர்ந்து ரூ.351.59 கோடி ஆகவும் நீடிக்கிறது.

2. **அரசு மானியம் (ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்) – ரூ. 302.51 கோடி ( சென்ற ஆண்டு – 302.51 கோடி)**

மார்ச் 31, 2017 அன்றைய தேதியில் மேலே குறிப்பிட்டுள்ள கணக்கில் ரூபாய் 302.51 கோடி நிலுவைத் தொகையாக உள்ளது.

3. **அரசு மானியம் (நெம்மேலியிலுள்ள கடல் நீரை குடிநீராக்கும் திட்டம்) – ரூ. 993.22 கோடி ( சென்ற ஆண்டு – ரூ. 992.64 கோடி)**

2016–17 நடப்பாண்டில் நெம்மேலியிலுள்ள 150 எம்எல்டி கூடுதல் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்திற்காக அரசு மானியமாக ரூபாய் 0.58 கோடி வாரியத்தால் பெறப்பட்டுள்ளது.

4. **அரசிடமிருந்து பெறப்பட்ட மானியம் – மற்றவை ரூ. 1139.69 கோடி (சென்ற ஆண்டு – 778.49 கோடி)**

14ம் மத்திய நிதி ஆணையம் மற்றும் செயலாக்க மானியங்கள், உட்கட்டமைப்பு வேலைகள், தமிழ்நாடு முதலீட்டு மேம்பாட்டு திட்டம், சோழிங்கநல்லூரில் 54 எம்எல்டி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் திருவான்மியூர் முதல் பூண்டி நீர் தேக்கம் வரை குழாய் அமைத்தல் மற்றும் சென்னை ஆறுகள் புனரமைத்தல் அறக்கட்டளை ஆகிய பணிகளுக்காக அரசிடமிருந்து ரூ. 361.20 கோடி மானியமாக பெறப்பட்டுள்ளது.

5. **அரசு மானியம் (சென்னை பெருநகர திட்டம்) – ரூ. 976.04 கோடி (சென்ற ஆண்டு – 899.62 கோடி)**

தமிழக அரசிடமிருந்து பெரு நகர திட்டங்கள் 2011–12, 2012–13 மற்றும் 2015–16க்காக முறையே ரூ. 21.18 கோடி, ரூ.50.53 கோடி மற்றும் ரூ. 4.71 கோடிகளை நடப்பு ஆண்டில் மானியமாக பெறப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2011–12, 2012–13, 2013–14 மற்றும் 2015–16ம் ஆண்டிற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டு மற்றும் பெறப்பட்ட மானிய தொகைகள் முறையே ரூ. 189 கோடி, ரூ. 390.20 கோடி, ரூ. 519.33 மற்றும் 139.40 கோடிகளாகும்.

6. **அரசு மானியம் – 45 மி.லி.டி எதிர் சவ்வூடு பரவல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம்– ரூ. 38.39 கோடி**

கொடுங்கையூர் மற்றும் கோயம்பேட்டில் உள்ள 45 மி.லி.டி எதிர் சவ்வூடு பரவல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலைய திட்ட பணியை நிறைவேற்றுவதற்காக ரூ. 38.39 கோடி மானியமாக 2016–17 ஆம் ஆண்டு வாரியத்தால் பெறப்பட்டுள்ளது.

7. **அரசு மானியம் – உள்ளாட்சி அமைப்பு மானியங்கள் – ரூ.190.34 கோடி (சென்ற ஆண்டு – 190.34 கோடி)**

உள்ளாட்சி அமைப்பின் மானியம் தொடர்பாக 2017 மார்ச் 31 ஆம் தேதி வரை மேற்கண்ட கணக்கில் நிலுவையில் உள்ள தொகை 2014–15 ஆம் ஆண்டிலிருந்து அப்படியே உள்ளது.

8. **பொதுப்பகிர்வு மாற்றல் நிதி – ரூ. 255.93 கோடி (சென்ற ஆண்டு – 214.78 கோடி)**

சென்னை மாநகராட்சியுடன் இணைந்து திட்டங்களை மேம்படுத்த பயன்படுத்தப்படும் இந்நிதி, மாநில வரி வருவாயிலிருந்து நிலையான விகிதத்தில் பெறப்படும் மானியத்தை குறிக்கிறது.

நடப்பாண்டில் மானியமாக பெறப்பட்ட ரூ. 41.15 கோடி ( சென்ற ஆண்டு – ரூ. 46.23 கோடி) ஏப்ரல் 2016 முதல் ஜனவரி 2017 வரையிலான மானியமாக கருதப்படுகிறது. பிப்ரவரி 2017 மற்றும் மார்ச் 2017 ஆம் மாதத்திற்கான மானியம் ரூபாய் 8.87 கோடி ஏப்ரல் 2017ல் பெறப்பட்டுள்ளது மற்றும் நடப்பு நிதியாண்டில் கணக்கில் எடுத்து கொள்ளப்படவில்லை.

III. **அட்டவணை – சி – நீண்ட கால கடன்கள்**

1. **அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் ரூ. 727.51 கோடி (சென்ற ஆண்டு – 727.51 கோடி)**

தமிழக அரசிடம் பெறப்பட்ட கடன் என்பது சென்னை திட்டம் I & II மற்றும் இதர திட்டங்களை குறிக்கிறது. இந்த கடன்களுக்கு வட்டியும் முதலும் நடப்பாண்டில் செலுத்தப்படவில்லை. 31 மார்ச் 2017ன்படி கடனின் மொத்த நிலுவை, அசல் ரூ. 562.78 கோடி வட்டி ரூ. 734.33 கோடி மொத்தம் ரூ. 1304.11 கோடிகளாக உள்ளது.

2. **நிதி நிறுவனங்களிலிருந்து பெற்ற கடன்கள் ரூ. 410.10 கோடி (சென்ற ஆண்டு – 449.61 கோடி)**

அ) முன்னாள் உள்ளாட்சி அமைப்புகள், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்திடமும் மற்றும் தமிழக நகர்புற உட்கட்டமைப்பு நிதியியல் சேவை நிறுவனத்திடமும் இருந்து கடன்களை பெற்றுள்ளது. இவ்விரு நிறுவனங்களிடமும் இருந்து பெறப்பட்ட கடன் முறையே ரூ. 129.73 கோடி மற்றும் ரூ.34.87 கோடிகள். 2012ம் ஆண்டிலிருந்து 2031ம் ஆண்டு வரையான காலத்திற்குண்டான கடன் தொகையை செலுத்த தமிழக அரசிடம் மானியமாக ரூ. 164.60 கோடிகள் கோரப்பட்டுள்ளது.

ஆ) தமிழக நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்திடம் வாரியம் பெற்றிருந்த கடனில் ஆண்டு காலம் ஏப்ரல் 2015 முதல் மார்ச் 2016 வரைக்கான தொகை ரூ. 21.98 கோடி செலுத்தப்பட்டுள்ளது. ஏப்ரல் 2016 முதலான கடன் தொகை செலுத்தப்படாமல் உள்ளது.

IV. **அட்டவணை – டி – ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள வைப்புகளும் வைப்பு தொகைகளும்**

1. **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்திற்காக பெறப்பட்ட தொகை ரூ. 6.52 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 6.22 கோடி)**

அந்தந்த தொகுதிகளில் உள்ள குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பின் மேம்பாட்டிற்காக நடப்பாண்டில் ரூ. 0.30 கோடி பெறப்பட்டுள்ளது.

## V. அட்டவணை – டி – நடப்பு பொறுப்புகளும் ஒதுக்கீடுகளும்

### 1. இதர பொறுப்புகள் தொழிலாளர் பொது வைப்பு நிதி (ரூ.32.20 கோடி) (சென்ற ஆண்டு – 38.04 கோடி)

பொது வைப்பு நிதி பணியாளர்களுக்கு முன்பணம் கொடுத்ததின் மீத தொகையிலிருந்து பணியாளர்களின் பங்களிப்பாக கருதப்படுகிறது.

### 2. இதர பொறுப்புகள் – மற்றவை

அ) கணக்கு பேரேடு எண்கள் 5390 மற்றும் 5410இல் இருக்கும் இருப்பு தொகை ரூ. 0.33 கோடி வெகுகாலமாக நிலுவையிலுள்ளது.

ஆ) பேரேடு எண்கள் 5311, 5315, 5370, 5451, 5580, 5800, 5830, 5790, 5810, 5371, 5400, 5420, 5452 மற்றும் 5480 ஆகிய கணக்குகளில் உள்ள கடன் நிலுவைத் தொகை ரூ. 225.03 கோடி ஒத்திசைவின் கீழ் உள்ளது.

## VI. அட்டவணை – எப் – நிலையான சொத்துக்கள்

1. ரூ. 81.40 கோடி மதிப்பில் துவக்கப்பட்ட மூன்று திட்டங்கள் முறையே இரண்டாவது சென்னை மாநகர குடிநீர் திட்டப்பணி, தினம்படி 530 மில்லியன் குடிநீர் வழங்கும் திட்டப்பணி மற்றும் சென்னை நகர நதி நீர்ப் பாதுகாப்பு திட்டப் பணிகள் அசையா சொத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இவற்றின் திட்டநிறைவு அறிக்கை இன்னும் பெறப்படவில்லை. நிதியாண்டு 2016–17ல் மேலே குறிப்பிட்டுள்ள திட்டங்களில் நடைமுறை வழக்காக 5 சதவீதம் மதிப்பிழப்பாக ரூ.4.07 கோடி வழங்கப்பட்டது.

2. நடப்பிலுள்ள திட்டங்கள் – சென்னை நகர நதி நீர்ப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மதுரை மற்றும் கும்பகோணம் கழிவு நீரகற்றுப் பணிகளுக்காக செலவிடப்பட்ட ரூ. 168.63 கோடி கழிவுநீரகற்று மூலதன வைப்பு பணிகளில் சேர்கிறது. இதன் மதிப்பு முறையே ரூ. 115.73 கோடி மற்றும் கும்பகோணம் ரூ. 52.90 கோடி. இந்த தொகை மதுரை ரூ. 117.58 கோடி மற்றும் கும்பகோணம் ரூ. 52.56 கோடி வைப்பு நிதியிலிருந்து பெறப்பட்டது. பெரும்பாலான வேலைகளுக்கான நிறைவு சான்றிதழ் பெறப்பட்டிருந்தாலும் சிறு வேலைகள் நிலுவையில் உள்ளது. இதற்கான செலவுகளை நடப்பிலுள்ள திட்டங்களாக கருதப்பட்டுள்ளது.

3. திட்டப்பணிகளுக்கு பெறப்படும் வைப்பு அந்தந்த திட்டங்களுக்கு செலவிடப்படுகிறது. வைப்பு நிதி பற்றாக்குறையை பொறுத்து வாரிய நிதி திட்டப்பணிக்கு பயன்படுத்தப்படுகிறது. இந்த நிதிக்கு வட்டி விதிக்கப்படுவதில்லை. இதேபோல் வைப்பு நிதி கூடுதலாக இருக்கும் பட்சத்தில், வாரியம் பின்பற்றும் வழக்கு முறைப்படி கூடுதல் வைப்புகளுக்கு உண்டான வட்டியை வாரியம் தருவதில்லை.

4. ஊதியம், கூலி மற்றும் படிகள், அலுவலக செலவினங்கள் மற்றும் நிர்வாகச் செலவுகள், எரிபொருள் மற்றும் மசகு எண்ணெயின் செலவுகள் நடப்புப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றின் சரிமுறை விகித ஒதுக்கீடுகள் முறையே 23%, 30% மற்றும் 30% ஆகும்.

5. சில முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரை, அவற்றால் உபயோகப்படுத்தப்பட்ட சில சொத்துக்கள் அவற்றிற்கு உரிமை இல்லாதவையாகும். இந்த சொத்துகளை பண இழப்பீட்டுடன் கூடிய உரிமை மாற்றம் செய்வதா அல்லது தற்போதைய நடைமுறையிலே தொடர்வதா என்பதை குறித்து முடிவு எடுக்கப்படவில்லை.

6. 2010–11ம் ஆண்டிலிருந்து நடைபெறும் வறட்சி நிவாரண பணிகளுக்கான தொகை ரூ. 107.85 கோடி மற்றும் 2015–16 ஆம் ஆண்டில் ரூ. 2.77 கோடி நடப்பாண்டில் ரூ. 0.16 கோடி நிலையான சொத்துக்களில் உள்ளடக்கும். இவ்வாறான சொத்துகளுக்கு தேய்மானம் ஏதும் கருத்தில் கொள்ளப்படவில்லை. 2010–11 ஆம் ஆண்டில் உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இச்சொத்துக்கள், அதனுடைய உபயோகத்தன்மையை தற்போது இழந்திருக்கும் ஆகவே அவற்றை தக்க அதிகார அமைப்பின் அனுமதியோடு தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7. குடிநீர், கழிவுநீர் மற்றும் பொது வகைபாடுகளின் கீழ், முந்தைய ஆண்டுகளில் செயல்பாட்டிற்கு வந்த ரூ. 14.25 கோடி மதிப்பிலான அசையா சொத்துகள் முறையே முடிவுற்ற சான்று பெறப்பட்டு, நடப்பாண்டில் மூலதனக் கணக்கில் கொண்டுவரப்பட்டுள்ளன. இவற்றின் மீது ரூ.0.73 தேய்மானம் கணக்கிடப்பட்டு, அத்தொகை முந்தைய கால சரிகட்டும் கணக்கில் கணக்கிடப்பட்டுள்ளது.

## VII. அட்டவணை – ஜி நடப்புச் சொத்துக்கள், கடன்கள், முன்பணம் மற்றும் வைப்புத் தொகை

1. **சரக்குகள் – ரூபாய் 11.42 கோடி – (சென்ற ஆண்டு – ரூ. 8.32 கோடி)**

அ) 31 மார்ச் 2017 அன்று, சரக்கு கையிருப்பின் வயது பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ள போதிலும், அதற்கான அறிக்கையை சம்பந்தப்பட்ட பிரிவால் தொற்றுவிக்க இயலவில்லை. பயனற்ற அல்லது உபயோகமில்லா சரக்குகள் கண்டறியப்பட்டு அவற்றை மாற்றுவதற்கு அல்லது ஏலத்தில் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஆ) 2011 ஆம் ஆண்டிலிருந்து முற்றிலும் நகர்வுகள் அற்ற அல்லது இடையிடையில் நகர்வுகள் சிலவற்றை கொண்ட, பின் வரும் இரண்டு கணக்குகளின் இருப்புகளும் சரக்குகள் கணக்கில் இருப்பில் உள்ளடங்கி உள்ளன. இந்த இரு கணக்குகளின் சரிகட்டும் செயல்முறை தொடங்கப்பட்டுள்ளது.

பண்டகசாலையின் இருப்பு குறைவு (பேரேடு எண் – 8240) – ரூ.1.94 கோடி (பற்று இருப்பு)

பண்டகசாலையின் இருப்பு மிகை (பேரேடு எண் – 8230) – ரூ.1.88 கோடி (வரவு இருப்பு)

இ) சரக்கு கணக்கில் தனிக் கணக்கு ரூபாய் 5 லட்சம் உள்ளடக்கியதாகும் (பண்டக அலுவலகம் – II ரூ.3.46 லட்சம் மற்றும் தலைமை அலுவலகம் ரூ. 1.54 லட்சம் ஆகியவை)

ஈ) ஈக்காட்டுதாங்கல் மத்திய கிடங்கு, பகுதி அலுவலகம் – 1, 7, 10 மற்றும் 13லிருள்ள பொது பேரேட்டு சரக்கு கணக்கு குறியீட்டு எண்களின் முறையே 8200, 8211, 8217, 8220 மற்றும் 8223லுள்ள சரக்கு இருப்பு தொகையும், இப்பகுதிகளிலிருந்து பெறப்பட்ட சரக்கு இருப்பு சான்றிதழிலுள்ள சரக்கு இருப்பு தொகையும் ஒத்துப் போகவில்லை. இக்கணக்குகளை சரிகட்டும் முறை நடப்பில் உள்ளது.

உ) சரக்கு, சரிக்கட்டுதல் கணக்கில் உள்ள நிலுவை இருப்புத் தொகை பண்டகசாலை கட்டுப்பாட்டுக் கணக்கு, பண்டக சாலை இருப்பு சரிக்கட்டுதல், உள்ளே வரும் பொருட்பட்டியல் மதிப்பீடு, பொருட் பட்டியல் வள ஆதாரங்கள் ஆகியவை உள்ளடக்கியது. நிலை இருப்பை போக்குவதற்கோ / திரும்பப் பெறுவதற்கோ சரிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளது.

2. **சில்லறைக் கடனாளிகள் – ரூ. 294.57 கோடி**

அ) 31 மார்ச் 2017 வரை வாரியம் பின்பற்றும் கொள்கை விதிகளின்படி சந்தேகத்திற்குண்டான கடன்களுக்கு குடிநீர் கட்டணம் மற்றும் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வரிகளின் தலைப்பின் கீழ் சிறு கடனாளிகளுக்கு காப்புறுதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆ) நடைமுறையிலுள்ள கொள்கைப்படி, கழிவுநீரகற்று சேவை கட்டணத்திற்கான சில்லறை கடனாளிகள் மீதான ஐயப்பாடுள்ள கடன்களுக்கு ஒதுக்கீடு கருதப்படவில்லை.

இ) வாரியத்தின் குழுமப் பணிக்கொடை பொறுப்பாட்சி கணக்கின் கீழ் வரும் ரூபாய் 1.20 கோடி சில்லறை கடனாளிகளில் உள்ளடங்கும்.

3. **தலைமை அலுவலக / பகுதி அலுவலக பரிவர்த்தனை – ரூ. 208.82 கோடி (சென்ற ஆண்டு– ரூ. 100.99 கோடி)**

தலைமை அலுவலக/பகுதி அலுவலக நடவடிக்கை கணக்கில் இருக்கும் மீதமுள்ள நிலுவைத்தொகை ஒத்திசைவு செய்யப்பட்டு வருகிறது.

4. **வசூல் கட்டுப்பாடு கணக்கு ரூ. 2.93 கோடி (சென்ற ஆண்டு– ரூ. 4.07 கோடி)**

வசூல் கட்டுப்பாட்டு கணக்கில் உள்ள மீதி நிலுவை தொகை ஒத்திசைவு செய்யப்பட்டு வருகிறது.

5. **வங்கிகளில் உள்ள குறுகிய கால வைப்புத் தொகை ரூ. 409.49கோடி (சென்ற ஆண்டு– ரூ. 306.63 கோடி)**

31 மார்ச் 2017 தேதியிலான வங்கிகளில் குறுகிய கால வைப்புத் தொகையின் விவரங்கள் ஒத்திசைவு செய்யப்பட்டு வருகிறது.

6. **கடன் மற்றும் முன் பணம் ரூ. 65.62 கோடி (சென்ற ஆண்டு– ரூ. 29.29 கோடி)**

கடன் மற்றும் முன் பணங்கள் – செலவினங்கள் – ரூ 1.76 கோடி (சென்ற ஆண்டு– ரூ. 1.63 கோடி)

மேலே குறிப்பிட்டவை, தென்னக ரயில்வேக்கு முன் பணமாக கொடுக்கப்பட்டு பத்து வருடங்களுக்கு மேலாக நிலுவைத் தொகையாக உள்ள ரூ. 0.67 கோடிகளை உள்ளடக்கியதாகும்.

7. **வைப்புத்தொகை மற்றும் முதலீடு – ரூ. 354.47 கோடி (சென்ற ஆண்டு – 315.51 கோடி)**

அ) **வைப்புத்தொகை மற்றும் முதலீடுகள் – பணியாளர்கள் / பிஎப்**

அ) 31 மார்ச் 2017ல் வங்கிகளில் வைப்புத் தொகை, பொது பேரேட்டிலுள்ள நிலுவைத்தொகையும் நிதித் துறை பதிவேட்டிலுள்ள நிலுவை தொகையும் வேறுபடுவதால் இவை ஒத்திசைவு செய்யப்படுகிறது.

ஆ) ஓய்வூதிய முதலீட்டு கணக்கில் (பேரேடு 8523) சேர்ந்துள்ள வட்டி, 31.3.2017ம் தேதியில், ரூ. 13.32 கோடி வரவு இருப்பாக உள்ளது. அதற்கான விவரங்கள் ஆராய்ந்து ஒத்திசைவு செய்யப்பட்டு வருகிறது.

இ) அதிகரித்துள்ள வட்டி – மற்ற கணக்கில் (பேரேடு 8520) 31 மார்ச் 2017, உள்ளபடி ரூ.1.61 கோடி பற்று இருப்பாக உள்ளது. அதற்கான விவரங்கள், ஆராய்ந்து ஒத்திசைவு செய்யப்பட்டு வருகிறது.

## வரவு–செலவு கணக்கிற்கான குறிப்புகள்

**I. அட்டவணை – எச் – குடிநீர் விற்பனை மற்றும் கழிவு நீரகற்றல் கட்டணம்**

**குடிநீர் விற்பனை – அளவி பொருத்தப்படாதது – வீட்டு உபயோகம் ரூ. 37.51 கோடி (சென்ற ஆண்டு – 35.91 கோடி)**

இந்த தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ள தொகை முன்னாள் உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பான தொகையை உள்ளடக்கியது. இது இப்போது வாரியத்தின் கூடுதல் பகுதி அலுவலகங்கள் என்றாகியுள்ளது. ஆயினும் வாரியத்தின் ஒப்புதல்படி இக்கட்டணங்கள் முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் விதிப்படியே வசூலிக்கப்படுகிறது.

**II. மானியங்கள் மற்றும் உதவித் தொகை – ரூ. 304.08 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 287.45 கோடி)**

1. மீஞ்சூர் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து வாங்கிய குடிநீர் அரசிடமிருந்து பெற்ற மானியத் தொகை ரூ. 175 கோடியும் மேற்கண்டவற்றில் உள்ளடங்கிய தொகையாகும்.
2. 2011–12ம் ஆண்டு முதல் 2013–14 ஆண்டு வரை நெம்மேலி திட்டத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவுகளுக்காக மற்றும் மின்சாரக் கட்டணத்துக்காகவும் ரூ. 104 கோடியை வழங்க அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. அதில் ரூ. 63.42 கோடியை நடப்பு நிதியாண்டில் விடுவிக்கப்பட்டுள்ளது.

**III. அட்டவணை – ஐ – குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி**

**குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி – ரூ. 165.86 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 163.86 கோடி)**

குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரிகளின் கீழ் காட்டப்பட்டுள்ள தொகை, கூடுதல் தொகுதிகளாக வாரியத்தில் ஐக்கியமாகியுள்ள முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளை சார்ந்தது.

**IV. அட்டவணை – ஜே – இதர வருமானம்**

**1) வங்கியிலிருந்து பெறப்பட்ட வட்டி ரூ. 50.06 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 20.86 கோடி)**

31.03.2017 அன்று வங்கியில் குறித்த கால உள்ள வைப்புத் தொகை ரூபாய் 406.48 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 306.63கோடி). நடப்பாண்டில் வைப்புத் தொகையில் சேர்ந்துள்ள வட்டி ரூ. 35.10 கோடியாகும்.

**2) தள்ளுபடி பெற்றது – ரூ. 1.81 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 1.86 கோடி)**

மேற்குறிப்பிட்ட தொகையானது, வாரியம் தனது திட்ட பணிகளுக்கு தேவையான பொருட்கள் விற்கும் விற்பனையாளர்களுக்கு குறிப்பிட்ட கெடு நாட்களுக்கு முன்பாக பணம் செலுத்தியதால் கிடைக்கப்பெற்ற தள்ளுபடியை குறிக்கின்றது.

**3) கழிப்பொருள் விற்பனை – ரூ. 0.47 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 0.12 கோடி)**

தகுந்த அதிகாரங்களின் உத்திரவின்படி, நடப்பு ஆண்டில் உபயோகமற்ற மற்றும் வழக்கிலில்லாத பொருட்கள் கழிப்பொருளாக்கப்பட்டு தொகையை வாரியத்தால் பெறப்பட்டுள்ளது.

## V. அட்டவணை – எல் – பணியாளர்களுக்கான சலுகைகள் மற்றும் ஒதுக்கீடுகள்:

**1. ஓய்வூதியம்**

சேர்திரள் ஓய்வூதிய இருப்பு ரூ. 92.54 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 92.54 கோடி) . அதில் ரூ. 139 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 138.95 கோடி) தொகை முதலீடு செய்யப்பட்டுள்ளது, மேலும் ரூ. 13.61 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 12.87 கோடி) பங்குத் தொகை பெரும் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டுள்ளது. ஓய்வூதிய நடைமுறை மதிப்பீடு, ஆலோசகர்களுடன் கலந்துரையாடப்பட்டு, பொறுப்பை உறுதிப்படுத்திய பின்னர் கணக்கில் கொண்டு வரப்படும்.

**2. பணிக்கொடை**

அ) இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் பணிக்கொடை குழுமநிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திலுள்ள பங்குத் தொகை வருவாய்க்கான கணக்கில் உள்ளது.

ஆ) பணிக்கொடை நடைமுறை மதிப்பீடு, ஆலோசகர்களுடன் கலந்துரையாடப்பட்டு, பொறுப்பை உறுதிப்படுத்திய பின்னர் கணக்கில் கொண்டு வரப்படும்.

**3. விடுப்பைப் பணமாக்குதல்**

பணியாளர்கள் ஓய்வு பெறும்போது விடுப்பைப் பணமாக்கிய தொகை ரொக்க அடிப்படையில் வரவு செலவு கணக்கில் காட்டப்படுகிறது.

## VI. அட்டவணை – ஓ – கடன் சேவைக் கட்டணம் – நிதி நிறுவனங்கள்

நடப்பாண்டில், நிதி நிறுவனங்களில் இருந்து கடன் வட்டி ரூ. 24.85 கோடி, இதில் ரூ. 9.45 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

## VII. வரி ஒத்திவைப்புகள்

தொடர்ந்து ஏற்படும் இழப்புகளை கருத்தில் கொண்டு, வரி குறைப்பாடுகள் எதிர் காலத்தில் ஏற்படாது என்பதால் ஒத்திவைக்கப்பட்ட வரிகள் மீது ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

## VIII. மற்றவை

1. 8 நவம்பர் 2016 முதல் 30 டிசம்பர் 2016 வரையிலான பணமதிப்பிழப்பு நடவடிக்கையின் போது தலைமை அலுவலகத்திலுள்ள பிரிவுகளால் பராமரிக்கப்படும் குறிப்பிட்ட வங்கி குறிப்புகளில் வைத்திருத்தல் மற்றும் கையாளுதல் பற்றிய விவரங்கள் கீழ்வருமாறு:

| தலைமை / பகுதி அலுவலகம் | தொடக்கத் திறந்த வைப்பிருப்புத் தொகை (08.11.16) | அனுமதிக்கப்பட்ட மொத்த சீட்டு | வங்கியில் செலுத்தப்பட்ட தொகை | முடிவு இருப்பு வைப்பிருப்புத் தொகை (30.12.16) |
|---|---|---|---|---|
| தலைமை அலுவலகம் – பண பரிவர்த்தனை பிரிவு | 34071.35 | 6338366.00 | 6328305.00 | 44132.35 |
| தலைமை அலுவலகம் – பட்டியல் மற்றும் வசூல் பிரிவு | 0.00 | 8158496.00 | 8158496.00 | 0.00 |
| பகுதி அலுவலகம் – 1 | 21188.00 | 2849486.00 | 2853267.00 | 17407.00 |
| பகுதி அலுவலகம் – 3 | 10021.00 | 2321224.00 | 2319101.00 | 12144.00 |
| பகுதி அலுவலகம் – 9 | 0.00 | 13745852.00 | 13745852.00 | 0.00 |
| பகுதி அலுவலகம் – 11 | 36284.00 | 4219235.00 | 4231367.00 | 24152.00 |
| பகுதி அலுவலகம் – 12 | 48844.00 | 3580391.00 | 3611655.00 | 17580.00 |
| பகுதி அலுவலகம் – 13 | 156111.00 | 10323392.00 | 10479503.00 | 0.00 |
| பகுதி அலுவலகம் – 15 | 0.00 | 2006251.00 | 2006251.00 | 0.00 |
| மண்டல அலுவலகம் – 1 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| மண்டல அலுவலகம் – 2 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| பயிற்சி மையம் | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |

எல்லாகுறுங்கிலும் பணமதிப்பிழப்பு காலத்தில் பகுதி அலுவலகங்கள் 2, 4, 5, 6, 7, 8, 10, 14 மற்றும் தர கட்டுபாடு அலுவலகங்களின் தகவல் குறைப்பாட்டால் குறிப்பிட்ட வங்கி குறிப்புகள் பராமரிக்கப்படவில்லை.

2. <u>நிச்சயமற்ற பொறுப்புகள்</u>

வாரியத்திற்கு எதிராக நீதிமன்றங்களிலுள்ள 214 வழக்குகளில் (உயர் நீதிமன்றம் – 188 மற்ற நீதிமன்றம் – 26) வழக்குகள் உள்ளன.

3. மூன்றாம் நபர் நிலுவைகள் ஒத்திசைவு மற்றும் உறுதி படுத்துதலுக்கு உட்பட்டவை.

4. சென்ற ஆண்டின் கணக்கு மதிப்புகள் தேவைப்படும் இடங்களில், இந்த ஆண்டின் வகைப்பாடுகளுக்கேற்ப மறு தொகுப்பு செய்யப்பட்டுள்ளன.

இதே தேதியிட்ட எங்களது அறிக்கையின் படி
எம்.சி. [illegible] மற்றும் குழுமம்
பட்டயக் கணக்காளர்கள்
பதிவு எண். 003051S

வாரியத்திற்காக

—ஒப்பம்—
கே. முத்துக்குமாரசாமி
நிதி இயக்குநர்

—ஒப்பம்—
டி.என். ஹரிஹரன், இ.ஆ.ப.,
நிர்வாக இயக்குநர்

—ஒப்பம்—
டி.ஆர். சந்திரசேகரன்
கூட்டாளி
உ.எண்: 018137
த.ஆ.அ.எண் : 19018137AAAAAA1101

இடம் : சென்னை
நாள் : 03/09/2019

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (சென்னைக் குடிநீர்) துறை

### சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் செயற்பாடுகள் பற்றிய 31. 03.2017 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான தமிழக அரசின் ஆய்வறிக்கை:

**அ. நிதி (ஆதாரம்) செயல்பாடுகள்**

1. சென்னைப் பெருநகரப் பகுதியில் வாழும் மக்களுக்கு, அதிகரித்து வரும் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வசதி ஆகியவற்றைத் திட்டமிட்ட மேம்பாடு மற்றும் உரிய வழியில் முறைப்படுத்தவும், குறிப்பாக போதிய அளவு பாதுகாக்கப்பட்ட தரமான குடிநீர் வழங்கவும் மற்றும் கழிவுநீரை வெளியேற்றவும், பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாக்கவும் மற்றும் அவற்றோடு தொடர்புடைய பணிகள் அனைத்தையும் கவனிப்பதற்கென்று 1978ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றுதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28, 1978) கீழ் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ஏற்படுத்தப்பட்டது.

2. 31–03–2017 ஆம் தேதியில் இவ்வாரியத்தின் சொத்துகளின் மதிப்பு ரூபாய் 7791.35 கோடிகள் ஆகும். இதில் நிலை நிலையான சொத்துகள் ரூபாய் 6644.44 கோடியும், நடப்பு சொத்துகள் ரூபாய் 1146.90 கோடிகள் மதிப்புள்ள கடன்கள், முன்பணம் மற்றும் வைப்பீடுகள் ஆகியவைகள் அடங்கும்.

3. வாரியத்தின் பொறுப்புகள் மொத்தம் ரூபாய் 9080.78 கோடி ஆகும். இதில் பங்குகள் ரூபாய் 1683.28 கோடி, அரசு மானியம் ரூபாய் 4082.26 கோடி, நீண்ட கால கடன்கள் ரூபாய் 1137.61 கோடி மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட வரவுகளும், வைப்புத் தொகை மற்றும் நடப்புப் பொறுப்புகள் ரூபாய் 2177.63 கோடி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

**சென்னைக் குடிநீர் வாரியத்தின் குடிநீர் கட்டணங்கள் குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி பற்றிய வருவாய் விவரங்கள் கீழ்காணும் அட்டவணையில் தெரிவிக்கின்றன:**

(ரூபாய் இலட்சங்களில்)

| | 2016-17 | 2015-16 |
|---|---|---|
| அ. குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டணங்கள் | | |
| அளவிடப்பட்டது | | |
| வீட்டு உபயோகத்திற்கு | 3818.02 | 1559.86 |
| வணிகத்திற்கு | 12261.82 | 11951.20 |
| நிறுவனங்களுக்கு | 1323.57 | 1213.81 |
| நகராட்சிகளுக்கு | 920.36 | 873.66 |
| அளவிடப்படாதவை | | |
| வீட்டு உபயோகத்திற்கு | 3750.65 | 3591.26 |
| வணிகத்திற்கு | 1999.44 | 1974.01 |
| நிறுவனங்களுக்கு | 21.39 | 21.28 |
| தனியார்க்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்கியது | 3821.09 | 3847.36 |
| கழிவு நீரகற்று கட்டணங்கள் | 2822.68 | 2016.54 |
| கழிவு நீரகற்று வரி | 1495.08 | 1450.88 |
| மொத்தம் (அ) | 32234.10 | 28499.86 |
| ஆ. குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி | | |
| குடிநீர் வரி | 3556.31 | 3496.70 |
| கழிவு நீரகற்று வரி | 13039.78 | 12859.38 |
| மொத்தம் (ஆ) | 16596.09 | 16356.08 |
| மொத்தம் (அ+ஆ) | 48830.19 | 44855.94 |

(ரூபாய் இலட்சங்களில்)

| | 2016-17 | 2015-16 |
|---|---|---|
| இ. இதர வருமானம் | 9546.46 | 5529.86 |
| ஈ. ஐயப்பாடுள்ள கடன்களுக்கான கூடுதல் ஒதுக்கீடு | 63.62 | - |
| உ. அரசு மானியம் | 30488.35 | 38745.25 |
| ஊ. முந்தைய கால சரிக்கட்டல் கணக்கு | 1498.92 | 994.97 |
| மொத்த வரவு – (அ+ஆ+இ+ஈ+உ+ஊ) | 90427.54 | 90126.02 |
| எ. செலவினங்கள் | 102445.14 | 105170.80 |
| ஏ. பற்றாக்குறை வருவாய் | 12017.60 | 15044.78 |

2004ம் ஆண்டு முதல் குடிநீர் கட்டண விகிதத்தில் மாற்றம் செய்யாத காரணத்தினாலும் மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான செலவில் ஏற்றம் ஏற்பட்டதாலும் ரூபாய் 120.17 கோடி பற்றாக்குறை ஏற்பட்டது.

4. 2016–2017 ஆம் ஆண்டு மொத்த வருமானம் ரூபாய் 904.28 கோடியாகும். இதில் செலவு ரூபாய் 1024.45 கோடி. இந்த ஆண்டிற்கு பற்றாக்குறை ரூபாய் 120.17 கோடி இருக்க, சென்ற ஆண்டில் (2015–16) பற்றாக்குறை ரூபாய் 150.45 கோடியாகும். வாரியம் அதன் பல்வேறு நோக்கங்களையும், குறிக்கோள்களையும் அடையும் பொருட்டு மொத்த வருமானம் மொத்த செலவை விட குறைவாக இருந்தாலும் அதன் பணிகளை முழு நோக்குடன் சிறந்த முறையில் மேற்கொண்டு வருகிறது.

5. ஒவ்வொராண்டும் குடிநீர் வழங்க நீர் ஆதாரங்களைப் பெருக்குதல் மற்றும் அது சார்ந்த பணிகளைச் செய்வதற்கு வாரியம் பல திட்டங்களை செயல்படுத்துகிறது. ஆகவே, மொத்த வட்டியின் ஒரு பகுதியினைத் திட்டச் செலவுகளுடன் கூட்டி முதலாக்கம் செய்யப்படுகிறது. மொத்த வட்டியான ரூபாய் 86.26 கோடியில் நடப்பு ஆண்டில் மட்டும் ரூபாய் 9.45 கோடி முதலாக்கம் செய்யப்பட்டுள்ளது. வட்டியை முதலாக்கம் செய்யப்பட்ட பின் ரூபாய் 76.81 கோடி வட்டியாக, 2016–17 ஆண்டிற்கான வருவாய் மற்றும் செலவு கணக்கின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது.

6. குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் கொள்ளளவினை அதிகரித்து மேம்படுத்த வாரியம், கடல் நீரை குடிநீராக மாற்றும் இரண்டு திட்டங்களை செயல்படுத்தி இருக்கிறது. ஒன்று மீஞ்சூரில் உள்ள கடல்நீரைக் குடிநீராக்கி இயக்கி, திருப்பித் தரும் திட்டம், மற்றொன்று ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு உதவியுடன் நெம்மேலியில் அமைந்துள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஆகும்.

## ஆ. செயல்முறை

### 1.1 புதியதாக அமைக்கப்படவுள்ள கண்ணன் கோட்டை மற்றும் தேர்வாய் கண்டிகை நீர்த்தேக்கத்திலிருந்து, பூண்டி நீர்த்தேக்கத்திற்கு நீர் கொண்டு செல்ல குழாய் பதிக்கும் பணி

புதிதாக அமைக்கப்படவுள்ள தேர்வாய்கண்டிகை நீர்த்தேக்கத்திலிருந்து கிருஷ்ணா கால்வாய் வரை 17 கிமீ நீளத்திற்கு 900 மிமீ விட்டமுள்ள பிரதான விசை குடிநீர் குழாய் பதிக்க ரூ.93.77 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, முடிவுற்றன.

### 1.2 சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குடிநீர் திட்டப் பணிகள் (CMCDM)

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், சென்னை நகருக்கும் அத்துடன் சிறப்பு கவனத்துடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கும், உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்த சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தை தொடங்கினார்கள். இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் கீழ்கண்டவாறு :-

## சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கல் திட்டங்கள்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பு (ரூ.கோடியில்) | பணியின் முன்னேற்ற நிலை |
|---|---|---|---|
| | 2011–12 | | |
| 1 | குடிநீர் விநியோகக் குழாய்கள் இல்லாத குடிசைப் பகுதிகளில் குடிநீர் குழாய்கள் பதித்தல் | 23.56 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| 2 | புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு கீழ்நிலைத் தொட்டிகள் மற்றும் குடிநீர் நிரப்பும் நிலையங்கள் அமைத்தல் | 12.23 | |
| 3 | அடைப்பு ஏற்பட்ட பிரதான குடிநீர் குழாய்கள் மற்றும் பிவிசி குழாய்களை மாற்றி அமைத்தல் | 20.71 | |
| | 2012–13 குடிநீர் வழங்கல் திட்டம் | | |
| 4 | நொளம்பூர் | 18.00 | நொளம்பூர், காரம்பாக்கம், நந்தம்பாக்கம், ஈஞ்சம்பாக்கம், சோழிங்கநல்லூர்–காரப்பாக்கம் ஆகிய பகுதிகளில் பணிகள் முடிவுற்றுள்ளன. இராமாபுரம், மணப்பாக்கம், ஒக்கியம்–துரைப்பாக்கம் ஆகிய பகுதிகளில் 52 விழுக்காடு பணிகள் முடிவுற்றுள்ளன. தாமத பணியின் காரணமாக 28.11.2013 அன்று ஒப்பந்த நீக்க கடிதம் அளிக்கப்பட்டது. மறு ஒப்பந்தம் கோரப்பட்டு, பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மதிப்பாய்வில் உள்ளன. |
| 5 | காரம்பாக்கம் | 20.56 | |
| 6 | ஈஞ்சம்பாக்கம் | 22.30 | |
| 7 | சோழிங்கநல்லூர்–காரப்பாக்கம் | 35.70 | |
| 8 | இராமாபுரம் | 32.54 | |
| 9 | மணப்பாக்கம் | 10.92 | |
| 10 | நந்தம்பாக்கம் | 6.00 | |
| 11 | ஒக்கியம்–துரைப்பாக்கம் | 46.00 | |
| | 2013–14 குடிநீர் வழங்கல் திட்டம் | | |
| 12 | சடையான்குப்பம் | 28.21 | முகலிவாக்கம் பணிகள் முடிவுற்றுள்ளன. இதர பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 13 | இடையான்சாவடி | | |
| 14 | கடப்பாக்கம் | | |
| 15 | மணலி | 21.33 | |
| 16 | பள்ளிக்கரணை | 42.82 | |
| 17 | முகலிவாக்கம் | 31.37 | |
| 18 | சின்னசேக்காடு | 11.00 | |
| 19 | கொட்டிவாக்கம் | 23.00 | பணிகள் முடிவுற்று, பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது. |
| 20 | பெருங்குடி | 41.00 | |
| 21 | பாலவாக்கம் | 28.00 | |
| 22 | வடபெரும்பாக்கம் மற்றும் தியம்பாக்கம் | 20.00 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பு (ரூ. கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 23 | சூரப்பட்டு | 82.61 | 87 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளன. தாமத பணியின் காரணமாக 28.11.2018 அன்று ஒப்பந்த நீக்க கடிதம் அளிக்கப்பட்டது. மறு ஒப்பந்தம் கோரப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 24 | கதிர்வேடு | | |
| 25 | புத்தகரம் | | |
| 26 | புழல் | | |
| | மொத்தம் | 577.86 | |

## 1.3 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம் (JnNURM)

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் மத்திய அரசு 35 சதவீதம் மானியம் வழங்குகிறது, மாநில அரசு 15 சதவீதத்தை வட்டியில்லா கடனாக வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் பின்வருமாறு :-

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பு (ரூ. கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | சென்னை மாநகரின் குடிநீர் விநியோக அமைப்பில் மேம்பாட்டுப் பணிகள் | 322.00 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| | குடிநீர் வழங்கல் திட்டம் | | |
| 2 | மதுரவாயல் | 23.30 | |
| 3 | திருவொற்றியூர் | 85.11 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 4 | அம்பத்தூர் | 267.08 | |
| 5 | ஆலந்தூர் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுப் பணிகள் | 64.39 | |
| 6 | உள்ளகரம்–புழுதிவாக்கம் | 24.24 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 7 | நெற்குன்றம்(எஞ்சிய பணிகள்) | 17.28 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| | மொத்தம் | 803.40 | |
| | இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கான கழிவு நீர்ப் பணிகள் | | |
| 1 | ஆவடி | 103.84 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 2 | ஸ்ரீ பெரும்புதூர் | 42.20 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| | மொத்தம் | 146.04 | |

## 1.4 ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) திட்டம்

மாதவரம் பகுதிக்கான குடிநீர் வழங்கல் திட்டம் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதி உதவியுடன் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. பணியின் விவரம் பின் வருமாறு :-

| திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | பணியின் முன்னேற்ற நிலை |
|---|---|---|
| மாதவரம் | 55.00 | 78 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளன. தாமத பணியின் காரணமாக 16.11.2016 அன்று ஒப்பந்த நீக்க கடிதம் அளிக்கப்பட்டது. மறு ஒப்பந்தம் கோரப்பட்டு, பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மதிப்பாய்வில் உள்ளன. |

## 1.6 தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III (TNUDP-III)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | பணியின் முன்னேற்ற நிலை |
|---|---|---|---|
| 1 | பம்மல் | 43.10 | பணிகள் முடிவுற்று, பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது. |
| 2 | பல்லாவரம் | 99.95 | பணிகள் முடிவுற்று, பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது. |
| | மொத்தம் | 143.05 | |

## 2. கழிவுநீரகற்று சேவைகள்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் கழிவு நீர் சுத்திகரித்தல், சுத்திகரிக்கப்பட்ட நீரினை மீண்டும் பயன்படுத்துதல், மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து மின் உற்பத்தி செய்தல் உள்ளிட்ட கழிவு நீரகற்றும் வசதிகளை வழங்கி வருகிறது. சென்னையில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் சுத்திகரிப்பு திறன் நாளொன்றுக்கு 727 மில்லியன் லிட்டர் ஆகும்.

குடியிருப்புகளிலிருந்தும் மற்றும் பிற கட்டடங்களிலிருந்தும் வெளியேற்றப்படும் கழிவுநீர் 3529 கிமீட்டர் நீளம் கொண்ட கழிவுநீர் அமைப்பின் மூலம் சேகரிக்கப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் கழிவுநீர் 273 கழிவுநீரேற்றும் நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது. சென்னை மாநகரின் கழிவுநீர் அமைப்பு 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் தனித்தனியாக சேகரித்தல், அனுப்புதல், சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றும் வசதிகளைக் கொண்டுள்ளது. கழிவுநீரேற்று நிலையங்களிலிருந்து சேகரிக்கப்படும் கழிவுநீர் 12 கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றது.

### கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் திறன்

| வ. எண் | சுத்திகரிப்பு நிலையம் | திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர்) |
|---|---|---|
| 1 | நெசப்பாக்கம் (3 பிரிவுகள்) | 117 |
| 2 | கொடுங்கையூர் (3 பிரிவுகள்) | 270 |
| 3 | கோயம்பேடு (3 பிரிவுகள்) | 214 |
| 4 | பெருங்குடி (3 பிரிவுகள் ) | 126 |
| | மொத்தம் (12 பிரிவுகள்) | 727 |

**கட்டுமானப் பணியில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்**

| வ. எண். | அமைவிடம் | சுத்திகரிப்பு திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர்) | திட்ட மதிப்பு (ரூ.கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| 1 | திருவொற்றியூர் | 31 | 26.33 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 2 | சோழிங்கநல்லூர்–1 | 18 | 33.71 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 3 | சோழிங்கநல்லூர் –2 | 54 | 65.97 | 62 சதவீதப் பணிகள் முடிவுற்றுள்ளன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன |
| | மொத்தம் | 103 | 126.01 | |

வாரியம் துவங்கிய 1978 ஆம் ஆண்டிலிருந்து வாரியத்தின் கழிவுநீரகற்றும் சேவைகள் பன்மடங்காக வளர்ச்சி அடைந்துள்ளது.

**கழிவுநீரகற்றும் சேவையில் முன்னேற்றங்கள்**

| வ.எண். | விவரங்கள் | 1978ஆம் ஆண்டில் | 2016ஆம் ஆண்டில் |
|---|---|---|---|
| 1 | கழிவுநீரகற்று குழாய்களின் நீளம் (கி.மீ) | 1,223 | 4000 |
| 2 | கழிவுநீரேற்று நிலையங்களின் எண்ணிக்கை | 58 | 232 |
| 3 | கழிவுநீர் சுத்திகரிப்பு திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டரில்) | 57 | 769 |
| 4 | நுகர்வோர்களின் எண்ணிக்கை | 1,14,000 | 8,10,014 |

## 2.1 சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்ட நிதியின் கீழ் கழிவுநீர் அமைப்புத் திட்டங்கள் (CMCDM)

இந்நிதியின்கீழ் சென்னை மாநகருடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்காக கீழ்க்காணும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**42 இணைக்கப்பட்ட பகுதிகளின் பாதாள சாக்கடை திட்டங்களின் நிலை**

| இணைக்கப்பட்ட பகுதிகளின் எண்ணிக்கை | பாதாள சாக்கடை பணிகள் முடிக்கப்பட்டவை | பணிகள் நடைபெறுபவை | நடைபெற உள்ளவை | |
|---|---|---|---|---|
| | | | விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருபவை | கைவிடப்பட்டவை |
| 42 | 15 | 10 | 14 | 3 |

கூடுதலாக இணைக்கப்பட்ட 42 பகுதிகளில் 15 பகுதிகளான வளசரவாக்கம், ஆலந்தூர், மாதவரம், மீனம்பாக்கம், மதுரவாயல், சூரப்பட்டு, புத்தகரம், கதிர்வேடு மற்றும் நொளம்பூர், போரூர், உள்ளகரம்–புழுதிவாக்கம், கத்திவாக்கம், சோழிங்கநல்லூர், காரப்பாக்கம் மற்றும் திருவொற்றியூர் ஆகியவற்றில் பணிகள் முடிவுற்றுள்ளன.

இணைந்துள்ள 10 பகுதிகளான பெருங்குடி, பள்ளிக்கரணை, அம்பத்தூர், ராமாபுரம், நெற்குன்றம், முகலிவாக்கம், மணப்பாக்கம், மணலி, சின்னசேக்காடு மற்றும் காரம்பாக்கம் ஆகியவற்றில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இடையான்சாவடி, சடையான்குப்பம், மற்றும் கடப்பாக்கம் ஆகிய 3 பகுதிகளுக்கான பாதாள சாக்கடை திட்டப் பணி, குறைவான மக்கள் தொகை அடர்த்தி காரணமாக கைவிடப்பட்டு உள்ளது. 2021ல் போதுமான மக்கள் தொகை அடர்த்தியின் பெருக்கத்திற்கு ஏற்ப பணிகள் மேற்கொள்ளப்படும்.

மீதமுள்ள இணைந்துள்ள 14 பகுதிகளான நந்தம்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, மடிப்பாக்கம், புழல், மாத்தூர், தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், செம்மஞ்சேரி, உத்தண்டி, ஒக்கியம்–துரைப்பாக்கம், ஈஞ்சம்பாக்கம், ஜல்லடம்பேட்டை ஆகியவற்றிற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் முடிவுற்றுள்ளன. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணி முடிவுற்றவுடன் நிதி உதவிக்கு பரிந்துரைக்கப்படும்.

**சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கழிவுநீரகற்று பணிகள்**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பு (ரூ.கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| | 2011–12 | | |
| 1 | கழிவு நீரேற்று நிலையங்களுக்கு இடையில் உந்து குழாய் பதித்தல் | 9.26 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 2 | பிரதான கழிவுநீரேற்று உந்து குழாய்களை பெரிதாக்குதல் | 20.39 | |
| 3 | முகப்பேரில் பாதாள சாக்கடை அமைப்பின் திருப்பு வாயில்கள் அமைத்தல் மற்றும் நீரூறிஞ்சி பின் இயந்திரத்துடன் கூடிய சாலை ஓர கழிவு நீரேற்று நிலையங்கள் கட்டுதல் | 14.08 | |
| 4 | தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் கழிவு நீரேற்று நிலையங்களின் மேம்பாட்டு பணிகள் | 11.24 | |
| 5 | கழிவுநீர் பிரதான குழாய்களை பெரிதாக்குதல் | 31.18 | |
| 6 | 35 ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் 50 தூர் வாரும் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் | 9.90 | இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. |
| 7 | பிரதான கழிவுநீரேற்று உந்து குழாய்களை புதிய வழி தடத்தில் அமைத்தல், பெரிதாக்குதல் மற்றும் தொடர்புப் பணிகள் | 36.55 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| | 2012–13 பாதாளச் சாக்கடைத் திட்டம் | | |
| 8 | கத்திவாக்கம் | 86.15 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 9 | சோழிங்கநல்லூர்–காரப்பாக்கம் | 110.90 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 10 | இராமாபுரம் | 48.50 | 98 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளன. தாமத பணியின் காரணமாக ஒப்பந்த நீக்க கடிதம் அளிக்கப்பட்டது. மறு ஒப்பந்தம் கோரப்பட்டு, பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மதிப்பாய்வில் உள்ளன. |
| 11 | கழிவுநீர் அமைப்பின் பராமரிப்புக்காக இயந்திரங்கள் கொள்முதல் | 15.20 | இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன |

| | | | |
|---|---|---|---|
| | 2013–14 பாதாள சாக்கடைத் திட்டம் | | |
| 12 | திருவொற்றியூர் (அன்னை சிவகாமி நகர்) | 8.51 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 13 | நொளம்பூர் | 26.01 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 14 | ஜாரப்பட்டு | 35.00 | |
| 15 | புத்தகரம் மற்றும் கதிர்வேடு | 60.00 | |
| 16 | முகலிவாக்கம் | 77.50 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| | மொத்தம் | 600.37 | |

## 2.2 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் (JnNURM)

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் மத்திய அரசு 35 சதவீதம் மானியம் வழங்குகிறது. மாநில அரசு 15 சதவீதத்தை வட்டியில்லா கடனாக வழங்குகிறது. மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு:–

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | பணிகளின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | தகவல் தொழில் நுட்ப சாலையில் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வசதிகள் அமைக்கும் பணிகள் | 41.77 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| | பாதாள சாக்கடைத் திட்டம் | | |
| 2 | உள்ளகரம்–புழுதிவாக்கம் | 28.08 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| 3 | அம்பத்தூர் (சிப்பம் 2,3,4 மற்றும் 5) | 130.91 | சிப்பம் 3,4,5 ஆகியவற்றில் பணிகள் முடிவுற்றன. சிப்பம் 2க்கு மறு ஒப்பந்தம் கோரப்பட்டு 6 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அவற்றில் 2 பிரிவுகளில் பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள 4 பிரிவுகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 4 | மதுரவாயல் | 57.45 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 5 | போரூர் | 38.29 | பெரும்பாலான பணிகள் முடிவுற்றுள்ளன. இராமாபுரம் பகுதியில் பணிகள் முடிவுற்ற பின்னரே செயல்பாட்டிற்கு வரும். |
| 6 | பெருங்குடி | 20.19 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 7 | பள்ளிக்கரணை | 58.61 | 94 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளன. தாமத பணியின் காரணமாக ஒப்பந்த நீக்க கடிதம் அளிக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் சமரசதீர்வு மையத்தை அணுகியதால், சமரசதீர்வு மைய செயல்முறைப்படி, ஒப்பந்ததாரர் நீக்கப்பட்டார். மறு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. |
| | மொத்தம் | 375.30 | |

| இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கான வைப்புத் தொகை பணிகள் | | | |
|---|---|---|---|
| 8 | ஆவடி நகராட்சி | 158.05 | பணிகள் முடிவுற்றன. |
| 9 | தாம்பரம் நகராட்சி | 160.97 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 10 | திருமழிசை பேரூராட்சி | 20.47 | பணிகள் முடிவுற்றன |
| 11 | ஸ்ரீ பெரும்புதூர் பேரூராட்சி | 47.40 | 79 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளன. தாமத பணியின் காரணமாக ஒப்பந்த நீக்க கடிதம் அளிக்கப்பட்டது. மறு ஒப்பந்தம் கோரப்பட்டு, மதிப்பாய்வில் உள்ளது. |
| | மொத்தம் | 386.89 | |

## 2.3 தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III – (TNUDP-III)

இத்திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட 3 பகுதிகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | பணிகளின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | மாதவரம் | 50.22 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| 2 | திருவொற்றியூர் | 67.63 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| 3 | அம்பத்தூர் பகுதி – I | 65.75 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| | மொத்தம் | 183.60 | |

ஹர்மந்தர் சிங்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

## ஐந்தாண்டு நிதிநிலைச்சுருக்கம் – ஒரு கண்ணோட்டம்

(ரூபாய் கோடியில்)

| விவரங்கள் | 2016-17 | 2015-16 | 2014-15 | 2013-14 | 2012-13 |
|---|---|---|---|---|---|
| அ. வருமானம் | | | | | |
| குடிநீர் விற்பனை மற்றும் குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி | 498.30 | 448.56 | 440.37 | 372.4 | 367.11 |
| இதர வருமானம் | 415.97 | 452.70 | 290.47 | 343.4 | 240.47 |
| மொத்த வருமானம் | 904.27 | 901.26 | 730.84 | 715.80 | 607.58 |
| ஆ. செலவினம் | | | | | |
| சம்பளம் மற்றும் ஊதியம் | 201.39 | 196.72 | 192.36 | 157.27 | 153.71 |
| இயக்குதல் மற்றும் பராமரித்தல் | 509.69 | 558.79 | 465.43 | 439.47 | 327.3 |
| வட்டி | 76.80 | 81.92 | 91.39 | 90.57 | 96.05 |
| தேய்மானம் | 154.68 | 166.86 | 165.59 | 146.38 | 138.43 |
| இதர செலவினம் | 81.89 | 47.41 | 93.28 | 64.84 | 59.17 |
| மொத்த வருவாய் செலவினங்கள் | 1024.45 | 1051.70 | 1008.05 | 898.53 | 774.66 |
| வரவை விட செலவு அதிகம் (அ-ஆ) (பற்றாக்குறை) | 120.18 | -150.44 | -277.21 | -182.73 | -167.08 |
| பங்குகள் | 1683.28 | 1627.25 | 1570.10 | 1483.69 | 1423.72 |
| அரசு மானியம் | 4082.26 | 3566.50 | 3145.59 | 2507.97 | 1939.42 |
| நீண்ட கால கடன்கள் | 1137.61 | 1177.33 | 1219.83 | 1267.69 | 1310.30 |
| நிலையான சொத்துக்கள் | 6644.44 | 6240.63 | 5903.27 | 5452.42 | 4857.10 |
| தற்போதைய நிகர சொத்துக்கள் | -1030.72 | -1038.80 | -986.56 | -934.69 | -742.52 |
| சேர்ந்த மிகை வரவு/பற்றாக்குறை | -1289.43 | -1169.25 | -1018.81 | -741.60 | -558.87 |
| மொத்த பணியாளர்கள் | 2,811 | 3,094 | 3,234 | 3,483 | 3,579 |

## சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் 2016–17 ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள் சட்டமன்றப் பேரவை முன் வைப்பதில் ஏற்பட்ட காலதாமதத்திற்கு உரிய காரணங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | (அ) | தமிழ்நாடு அரசு நிதித் துறையின் அறிவுரைப்படி நிறுவனங்கள், கணக்குகளை எந்த கால கட்டத்திற்குள் தொகுக்க வேண்டும் | 30.06.2017 |
| | (ஆ) | கணக்குகள் தொகுக்கப்பட்ட தேதி | 03.09.2019 |
| | (இ) | உரிய கால கட்டத்திற்குள் தொகுக்கப்படாவிட்டால் அதற்கான காரணங்கள் | 42 உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளை ஒருங்கிணைத்து திருத்தி அமைக்கப்பட்ட நடை அமைப்பால், கணக்குகளை முடிப்பதில் பெருமளவு தாமதம் ஏற்பட்டது. 2014–15 ஆம் ஆண்டில், புதிதாக சேர்க்கப்பட்ட பகுதி அலுவலகங்களில் யூனிக்ஸ் மென்பொருளிலிருந்து ஆரக்கிள் மென்பொருளுக்கு மாற்றப்பட்டதின் காரணமாக கணக்குகளை முடிப்பதில் தாமதம் ஏற்பட்டது. அதன் காரணமாக 2015–16ம் மற்றும் 2016–17ம் ஆண்டின் கணக்குகளை முடிப்பதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. |
| 2. | (அ) | கணக்குகளை தணிக்கை செய்ய தணிக்கையாளர்கள் எப்பொழுது நியமனம் செய்யப்பட வேண்டும் | இந்திய தணிக்கை துறைத் தலைவர் தணிக்கையாளர்களை சிபாரிசு செய்ததும், அதை அரசு அனுமதி கொடுத்தவுடன். |
| | (ஆ) | நியமனம் செய்யப்பட்ட தேதி | 29.10.2018 |
| | (இ) | உரிய காலத்திற்குள் தணிக்கையாளர் நியமனம் செய்யப்படாததற்கான காரணங்கள் | 2016–17ம் நிதி ஆண்டில் வாரியக் கூட்டம் நடைபெறவில்லை. |
| 3. | (அ) | தணிக்கையாளர்கள் எந்த தேதியில் தணிக்கையை முடிக்க வேண்டும் | 31.10.2017 |
| | (ஆ) | தணிக்கை முடித்த தேதி | 03.09.2019 |
| | (இ) | உரிய காலத்திற்குள் தணிக்கை முடிக்கப்படாததற்கான காரணங்கள் | உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் வாரியக்கணக்குடன் இணைக்கப்பட்டது. மேற்கண்ட காரணங்களால் தணிக்கையாளருக்கு குறித்த காலம் 2011–12 முதல் 2013–14 வரை கணக்குகள் சமர்ப்பிக்கப்படவில்லை. 2014–15 ஆம் ஆண்டில், புதிதாக சேர்க்கப்பட்ட பகுதி அலுவலகங்களில் யூனிக்ஸ் மென்பொருளிலிருந்து ஆரக்கிள் மென்பொருளுக்கு மாற்றப்பட்டதின் காரணமாக கணக்குகளை முடிப்பதில் பெருமளவு தாமதம் ஏற்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | | அதனை தொடர்ந்து 2014–15ம் ஆண்டும் கணக்குகள் முடிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக 2015–16ம் மற்றும் 2016–17ம் ஆண்டின் கணக்குகளை முடிப்பதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. |
| 4. | (அ) | மாநில கணக்காயர்/தணிக்கையாளர் கருத்துகள் பெறப்பட வேண்டிய தேதி | பொருந்தாது |
| | (ஆ) | பெறப்பட்ட தேதி | பொருந்தாது |
| | (இ) | உரிய காலத்திற்குள்முடிக்காவிட்டால் அதற்கான காரணங்கள் | பொருந்தாது |
| 5. | (அ) | ஆண்டு கணக்குகள் எந்த தேதிக்குள் வாரியத்தின் பொதுக் குழுக் கூட்டத்தில் வைக்கப்படவேண்டும் | 30.11.2016 |
| | (ஆ) | எந்த தேதியில் வைக்கப்பட்டன | 11.10.2019 |
| | (இ) | கால தாமதத்திற்கான காரணங்கள் என்ன | உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் வாரியக்கணக்குடன் இணைக்கப்பட்டது. மேற்கண்ட காரணங்களால் தணிக்கையாளருக்கு குறித்த காலம் 2011–12 முதல் 2013–14 வரை கணக்குகள் சமர்ப்பிக்கப்படவில்லை. 2014–15 ஆம் ஆண்டில், புதிதாக சேர்க்கப்பட்ட பகுதி அலுவலகங்களின் பூளிக்ஸ் மென்பொருளிலிருந்து ஆரக்கிள் மென்பொருளுக்கு மாற்றப்பட்டதின் காரணமாக கணக்குகளை முடிப்பதில் பெருமளவு தாமதம் ஏற்பட்டது. அதனை தொடர்ந்து 2014–15ம் ஆண்டும் கணக்குகள் முடிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக 2015–16ம் மற்றும் 2016–17ம் ஆண்டின் கணக்குகளை முடிப்பதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. |
| 6. | (அ) | அச்சடிக்கப்பட்ட ஆண்டு அறிக்கைகள் பெறப்பட வேண்டிய தேதி | 31.12.2017 |
| | (ஆ) | உரிய காலத்தில் பெறப்படாவிட்டால் அதற்குரிய காரணங்கள் | உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் வாரியக்கணக்குடன் இணைக்கப்பட்டது. மேற்கண்ட காரணங்களால் தணிக்கையாளருக்கு குறித்த காலம் 2011–12 முதல் 2013–14 வரை கணக்குகள் சமர்ப்பிக்கப்படவில்லை. 2014–15 ஆம் ஆண்டில், புதிதாக சேர்க்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | | | பகுதி அலுவலகங்களின் பூனிக்ஸ் மென்பொருளிலிருந்து ஆரக்கிள் மென்பொருளுக்கு மாற்றப்பட்டதின் காரணமாக கணக்குகளை முடிப்பதில் பெருமளவு தாமதம் ஏற்பட்டது. அதனை தொடர்ந்து 2014–15ம் ஆண்டும் கணக்குகள் முடிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக 2015–16ம் மற்றும் 2016–17ம் ஆண்டின் கணக்குகளை முடிப்பதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. |
| 7. | (அ) | ஆண்டு கணக்குகள் அரசுக்கு அனுப்பப்பட வேண்டிய தேதி | 31.12.2017 |
| | (ஆ) | ஆண்டு கணக்குகள் அரசுக்கு அனுப்பப்பட்ட தேதி | 16.11.2019 |
| | (இ) | உரிய காலத்தில் பெறப்படாவிட்டால் அதற்குரிய காரணங்கள் | — |
| 8. | (அ) | ஆண்டு அறிக்கையை அரசு பெற்ற தேதி | — |
| | (ஆ) | ஆய்வு செய்ய எடுத்துக் கொண்ட காலம் | — |
| | (இ) | காலதாமதமிருப்பின் அதற்குரிய காரணங்கள் | — |
| 9. | (அ) | ஆண்டு அறிக்கை பேரவை முன் வைக்கப்பட வேண்டிய தேதி | 31.03.2018 முன்னால் |
| | (ஆ) | பேரவைச் செயலகத்திருந்து அனுப்பப்பட வேண்டிய தேதி | அடுத்த கூட்டத் தொடருக்கு முன்னால் |

ஹர்மந்தர் சிங்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.